## இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் - 2017

---

இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒருங்கிணைந்த நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான ஒருங்கிணைந்த விரிவான வருமானக் கூற்று, ஒருங்கிணைந்த உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் ஒருங்கிணைந்த காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன (திருத்த) அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க காணி மீட்பு மற்றும் அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்தின் 17(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1800) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி**

இவ்வறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசப்பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - கூட்டுத்தாபனம்**

இவ்வறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினது நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - (தொகுதி)**

மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள், அதன் உப கம்பனியாகிய வரையறுக்கப்பட்ட காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி (பிரத்தியேக) கம்பனியினதும் வரையறுக்கப்பட்ட எல்ஆர்டீசீ சேவைகள் (பிரத்தியேக) கம்பனியினதும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருந்ததுடன், துணைக் கம்பனி தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் உரித்து 80 சதவீதம் ஆகவுமிருந்தது.

பின்வரும் அவதானிப்புகளின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி (பிரத்தியேக) கூட்டுத்தாபனத்தின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்பட்டது.

(அ) 2015 யூலை 15 ஆந் திகதியன்று நிறுவனமானது நிதி வாடகைக் கொள்வனவு நடைமுறையின் கீழ் கொள்வனவு செய்த ரூபா 4,508,000 பெறுமதியான சீமெந்துக்கல் தயாரிப்பு இயந்திரம் மற்றும் ரூபா 2,695,000 பெறுமதியான சீமெந்துக்கல் தயாரிப்புத் தட்டுக்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதலாக மீளாய்வாண்டின் இறுதியளவிலும் பயன்படுத்தப்படாதிருந்ததுடன், இயந்திரத்திற்கான நலிவடையும் நட்டமும் (Impairement Loss) சிறிய மற்றும் மத்தியதர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 27.5 ஆம் பிரிவின் பிரகாரம் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது கம்பனி பயன்படுத்திய ரூபா 4,216,275 பெறுமதியான கட்டிடம் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 17.4 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கிலிடப்படாது நடைபெறும் வேலையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படாமையால் கட்டிடங்களது பெறுமதி குறைத்துக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 5 விடயங்களுக்குரிய பெறுமதியாகிய ரூபா 18,102,359 க்குக் கணக்காய்விற்கான சான்று சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 6 மீதிகள் அவற்றுடன் தொடர்புடைய பட்டோலைகளில் காணப்படும் மீதிகளுடன் கணக்கிணக்கஞ் செய்யப்படாததுடன், அவற்றுக்கிடையே ரூபா 32,712,441 வேறுபாடும் அவதானிக்கப்பட்டது.

## 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - கூட்டுத்தாபனம்

### 2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

(i) நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம், செலவினம் என்பன நியாயமான பெறுமதியில் (Fair value) சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், கூட்டுத்தாபனம் ரூபா 2,071.41 மில்லியன் கிரயத்தில் சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்களது நியாயமான விலையை மதிப்பிட்டு அவற்றை நிதிக்கூற்றுக்களில் காட்டவில்லை.

(ii) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனிக்கு 53 மாதாந்த தவணையில் திருப்பி அறவிடும் அடிப்படையில் கடனாக ரூபா 25 மில்லியனை வழங்கியிருந்தபோதும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அக் கடன் தொகையில் குறுகிய கால மற்றும் நெடுங்கால அடிப்படையில் கூட்டுத்தாபனம் பெற வேண்டியவற்றை நியமத்தின் 56 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்கள் என வெவ்வேறாகக் காட்டவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07**

அந்நியச் செலாவணி மாற்று விகிதம் மாற்றமடைவதன் காரணமாக ஏற்படும் தேறாத இலாபமும் நட்டமும் காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கலின் கீழ் காட்டப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் ரூபா 14 மில்லியன் அந்நியச் செலாவணி மாற்ற விகித மாற்றத்தால் ஏற்பட்ட நட்டம் அவ்வாறு காட்டவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 11**

கூட்டுத்தாபனம் ஈடுபட்டவாறிருக்கும் நிர்மாண வேலைகளது (Ongoing Construction) வருமானம், கிரயம் மற்றும் இலாபம் என்பன முடிவுறும் கட்ட (Stage of Completion) அடிப்படையிலேயே நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபோதும், ஒப்பந்தங்களிலான வருமானம், கிரயம், இலாபம் என்பன நிமயங்களில் குறிப்பிடப்படும் விகிதத்தில் இனங்காணப்படவில்லை. சான்றுறுதிப்படுத்தப்பட்ட வேலைகளுக்குச் செலவிடப்பட்ட கிரயம், குறித்த வருமானத்துடனும் செலவினத்துடனும் சீராக்கல் செய்யப்படக்கூடியவாறு

இனங்காணப்படாமையால் கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டிற்கான 48 ஒப்பந்தங்களில் இனங்காணப்பட்டிருந்த ஒப்பந்த வருமானம் ரூபா 58,366,302 குறைவாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

----------------------------------------------------------------------

நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களது ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 762.34 மில்லியன் கிரயமுடைய சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியபோதும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைய, ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட வழுவானது 8 ஆம் இலக்க இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 38**

--------------------------------------------------------------------

நியமத்தின் 118 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் கணனி மென் அணிகள் வேறாக இனங்காணப்படவில்லை. அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் போதியளவு வெளிப்படுத்தப்படவில்லை.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39**

--------------------------------------------------------------------

நியமத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனம் நிதிசார் சொத்துக்கள் (Financial Assets) வகைப்படுத்தப்படவில்லை.

**(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40**

--------------------------------------------------------------------

(i) நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய ரூபா 101.35 மில்லியன் கிரயமுடைய இரண்டு முதலீட்டுச் சொத்துக்களுக்குரிய நியாயமான பெறுமதியைக் கணித்து நிதிக்கூற்றுக்களில் காட்டியிராததுடன், ரூபா 1,259.74 மில்லியன் கிரயமுடைய 88 ஏக்கர் காணியினது நியாயமான பெறுமதியை ரூபா 5,634.52 மில்லியனாக நிதிக்கூற்றுக்களில் காட்டியபோதும், அதற்கு அரசாங்க விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டைப் பெறாது அக்காணிக்கு அடுத்த காணிக்கு அரசாங்க விலைமதிப்பீட்டாளர் வழங்கிய மதிப்பீட்டின் அடிப்படையில் நியாயமான விலையை (Fair Value) கூட்டுத்தாபனம் கணிப்பிட்டிருந்தது.

அவ்வாறே, கூட்டுத்தாபனம் வெளி நபர்களுக்கு வாடகைக்கு வழங்கிய காணியானது முதலீட்டுச் சொத்தாகக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டுப்படாததுடன் காணிகளது பெறுமதி தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்படாதிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனம் நெடுங்காலக் குத்தகைக்கு 03 காணிகளை ரூபா 360,000 க்கு வழங்கியிருந்தது. இப்பெறுமதி முதலீட்டுச் சொத்தாகக் கணக்கிலிடப்படவில்லை.

(iii) ஒறுகொடவத்தையில் உள்ள செயற்திட்ட அலுவலகத்தை நடாத்தும் கூட்டுத்தாபனம் ஏறக்குறைய 2 றூட் 20 பேர்ச்சர்ஸ் காணியையும் அதற்குரிய கட்டிடங்களையும் நிதிக்கூற்றுக்களில் காட்டவில்லை.

## 2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தியத உயன சிற்றுண்டிச்சாலையை வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனிக்கு ரூபா 88.42 மில்லியனுக்கு ஒப்படைத்திருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனம் பெற வேண்டியிருந்த அத்தொகை பெற வேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகக் கட்டிடங்களுக்கான முன்னைய ஆண்டினது தேய்மானப் பெறுமதி ரூபா 1.40 மில்லியன் ஆகும். இது மீளாய்வாண்டின் இலாபத்தில் சீராக்கல் செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டினது இலாபம் அதேயளவு குறைத்துக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(இ) கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின்போது தியத உயன வளாகத்தில் நிர்மாணித்த வெசாக் மேடைக்கு செலவாகிய கிரயத்தில் உள்ளடங்கிய மூலதனமல்லாத செலவினமாகிய ரூபா 206,573 குறித்த சொத்தில் மூலதனமாக்கப்பட்டதால் சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்களது பெறுமதி அதேயளவு அதிகரித்திருந்தது.

(ஈ) மீளாய்வாண்டினது வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய ஐயக் கடன்களுக்கான நிதியேற்பாடு அதிகரிப்பாகிய ரூபா 134,036,755 விற்பனைச் செலவினத்தில் கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2012 ஆம் ஆண்டு முதல் கூட்டுத்தாபனம் பயன்படுத்தும் எக்ஸ்கவேட்டர் இயந்திரத்தினதும் 02 படகுகளினதும் பெறுமதியை மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டவில்லை.

(ஊ) 2010 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்திற்குரிய 04 டிறக்டர் டிரெயிலர்கள் பவுசராக நவீனமயப்படுத்தப்பட்டபோதும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அது மதிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட முதுன்எல கடல் மணல் விற்பனை நிலையத்தின் ரூபா 596,344 பெறுமதியான 84 கியூப் மணல் குறைவை நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் மீளாய்வாண்டின் இலாபம் அதேயளவு பெறுமதியால் அதிகரித்துக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபச் சேவையிலிருந்து ஓய்வுபெற்றபோதும் பணிக்கொடை வழங்கப்படாத ஊழியர்களின் பொருட்டு வழங்க வேண்டிய ரூபா 2,232,000 பணிக்கொடைக்கான நிதியேற்பாட்டைக் கணக்கிலிருந்து நீக்கி நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டாமையால் நடைமுறைப் பொறுப்பு அதேயளவு குறைத்துக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ஐ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை நிதியேற்பாடு ரூபா 61,292,000 ஆகுமாயினும், வருமான வரியைக் கணிப்பிடுகையில் அதனை ரூபா 62,647,663 ஆகச் சீராக்கல் செய்ததனால் வரி அறவிடப்படக் கூடிய நியதிச்சட்ட வருமானம் ரூபா 1,355,663 மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய வருமான வரி ரூபா 379,586 என அதிகமாகக் கணிப்பிடப்பட்டிருந்தன.

(ஒ) கணக்காய்வினது கணிப்பீட்டின்படி மீளாய்வாண்டிற்கான பொருளாதாரச் சேவைகள் கட்டணம் ரூபா 4,857,423 ஆகுமாயினும், அது கணக்கிலிடப்படவில்லை.

(ஓ) ஏனைய நிறுவனங்களின் பொருட்டு சூரியவெவவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்திற்கு மதியுரைச் சேவைக் கிரயமாக ரூபா 1,064,340 கணக்கிலிடப்பட்டபோதும் அதற்குரிய வருமானம் கணக்கிலிடப்படவில்லை.

**2.3.3 எதிர்பாராப் பொறுப்புகள்**

கூட்டுத்தாபனம் 4 மில்லியன் கியூபிக் மீட்டர் கடல் மணலைப் பெறுவதற்கு செய்து கொண்ட ஒப்பந்தத்தில் வழங்குனருக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய முற்பணம் மற்றும் வேலை முன்னேற்ற பில் (Progress Bill) என்பவற்றிற்கு கூட்டுத்தாபனம் பெற்ற 19.42 மில்லியன் அமெரிக்க டொலர் நாணயக் கடித வசதி (Letter of Credit Facility) நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

**2.3.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நெடுங்கால ஊழியர் நலன் மீதியானது நிதிக்கூற்றுக்களின் பிரகாரமும் பட்டோலையின் பிரகாரமும் ரூபா 2,231,317 வித்தியாசத்தைக் காட்டியதுடன், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2 கணக்கீட்டு விடயங்களது மீதி ரூபா 96,519,905 ஆகவுமிருந்தது. மீதிகளது உறுதிப்படுத்தலின் பிரகாரம் இம்மீதிகளது பெறுமதி ரூபா 63,912,369 ஆகும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் மணல் விற்பனைப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்ட கடல் மணல் 237,046 கியூப் ஆகும். எவ்வாறாயினும், மணல் கையிருப்புப் பதிவேட்டின் பிரகாரம் அது 235,383 கியூப் ஆகியமையால் 1663 கியூப் மணல் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**2.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய பெறுமதி சேர் வரியாகிய ரூபா 9,230,850 க்குரிய வரி இணக்கக் கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் ரூபா 6,052.15 மில்லியன் கடன்பட்டோர் மற்றும் ரூபா 1,772.85 மில்லியன் கடன் கொடுத்தோர் மீதியில் கணக்காய்வில் உறுதிசெய்யப்படுமாறு கோரப்பட்ட பெறுமதி முறையே ரூபா 660.98 மில்லியன் மற்றும் ரூபா 250.63 மில்லியன் என்பனவாகும். அதில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பெறுமதி முறையே ரூபா 123.13 மில்லியன் மற்றும் ரூபா 34.84 மில்லியன் என்பனவாகும். உறுதிசெய்யப்படாத கடன்பட்டோர் மீதி ரூபா 537.85 மில்லியனாகும். கடன்கொடுத்தோர் மீதி ரூபா 215.79 மில்லியனாகும்.

## 2.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சேவை வழங்கும் செயற்திட்டங்களிலிருந்து கூட்டுத்தாபனம் பெற வேண்டியிருந்த தொகை ரூபா 868,698,232 ஆகும். அதில் ஓராண்டிற்கு குறைவான பெற வேண்டிய மீதியான ரூபா 629,011,353, 1-5 ஆண்டுகளுக்குட்பட்ட தொகையான ரூபா 208,745,944, 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொகையான ரூபா 30,940,932 என்பன அறவிடப்படாதிருந்தன.

(ஆ) இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான முத்துராஜவெலயில் அமைந்துள்ள காணியில் கூட்டுத்தாபனம் அகற்றிய மணலை 05 ஆண்டுகளாக மீண்டும் நிரப்புவதற்கோ அல்லது அம்மணலது மதிப்பிடப்பட்ட பெறுமதியான ரூபா 171 மில்லியனைக் கொடுப்பனவு செய்வதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டு தொடக்கம் வெளி நாட்டுக் கம்பனி ஒன்றிற்குக் கூட்டுத்தாபனம் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த 575,000 யூரோக்களைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அக்காலப்பகுதியின் போதிலான செலாவணி விகிதத்தின் சாதகமற்ற வேறுபாடுகளினால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை ரூபா 104.93 மில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன், ரூபா 14.15 மில்லியன் செலாவணி நட்டமும் ஏற்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஒப்பந்தக் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 385.76 மில்லியனாகும். அதில் 2 முதல் 5 ஆண்டுகளாகத் தீர்வு செய்யப்படாதிருந்த மீதி ரூபா 18.36 மில்லியனாகும்.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனம் பெற்ற வேலைக்கு முன்னரான முற்பண மீதியாகிய ரூபா 495.97 மில்லியனைக் குறித்த விலைப்பட்டியலுக்குரிய பணத்தைச் செலுத்துகையில் கழித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 172,755,613 ஆகும். அவ்வாறே, கூட்டுத்தாபனம் உப ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கிய வேலைக்கு முன்னரான முற்பண மீதி ரூபா 94,121,853 ஆகும். அதில் ஓராண்டிற்கு மேலாகத் தீர்வு செய்யப்படாதிருந்த தொகை ரூபா 32,913,574 ஆகும்.

(ஊ) தீர்வு செய்யப்படாதிருக்கும் திருப்பிச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புகளது பெறுமதி ரூபா 26.70 மில்லியனாகும்.

(எ) கூட்டுத்தாபனம் இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனிக்கு வாடகைக்கு வழங்கிய காணிகளதும் கட்டிடங்களதும் 2003 முதல் 2012 வரையிலான அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 7,650,907 ஆகும். இதனை மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அறவிடுவதற்குக் கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியளவில் கூட்டுத்தாபனம் சுவீகரித்திருந்த 274.5 ஏக்கர் காணிகளுக்கு வழங்க வேண்டியிருந்த இழப்பீடு ரூபா 62.25 மில்லியன் ஆகும். இதில் 2 முதல் 5 ஆண்டுகளாகத் தீர்வு செய்யப்படாத ரூபா 19.74 மில்லியனும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 25.56 மில்லியனும் ஆகும். அவ்வாறே, இழப்பீட்டிற்குரிய வட்டி ரூபா 106.90 மில்லியன் ஆகியதுடன், அதில் 2 முதல் 5 ஆண்டுகளுக்குரிய ரூபா 17.67 மில்லியன் மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 71.25 மில்லியன் என்பவற்றைத் தீர்வு செய்வதற்குக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சேவையிலிருந்து விலகிய மற்றும் சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஊழியர்களுக்குக் கூட்டுத்தாபனம் வழங்கியிருந்த கடன் ரூபா 137,890 ஆகும். அதில் ரூபா 127,890 மீதியானது 5 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படாதிருந்தது. இதனைச் சட்டபூர்வமாக அறவிடுவதற்கான நடவடிக்கைகளையும் கூட்டுத்தாபனம் மேற்கொள்ளவில்லை.

(ஒ) மெதமுலான டீ.ஏ.ராஜபக்ஸ ஞாபகார்த்த நிலையத்தை நிர்மாணித்தமை தொடர்பாக ரூபா 47.36 மில்லியனைப் பெற வேண்டியுள்ளதாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தபோதும், அந்நிறுவனத்தினது மீதிகள் உறுதிப்படுத்தப்பட்டபோது கூட்டுத்தாபனத்திற்கு எத்தொகையும் செலுத்தப்படுவதற்கில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஓ) அம்பாந்தோட்டை சேவை நிலையத்தை நிர்மாணிப்பது தொடர்பாக 2014 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனம் பெற்ற வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணமாகிய ரூபா 68 மில்லியன் 2018 செப்டெம்பர் 30 ஆந் திகதியளவிலும் தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இச்செயற்திட்ட நடவடிக்கைகள் இடை நடுவே நிறுத்தப்பட்டுமிருந்தன.

(ஔ) 2015 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனம் அமுலாக்கிய 03 நிர்மாண வேலைகளது நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி அதிகார சபையால் இடைநிறுத்தப்பட்டதால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட செலவினம் (Demobilization Cost) ரூபா 27.29 மில்லியனாகும். மீளாய்வாண்டின் இறுதியளவில் இதனை அந்த அதிகாரசபையிடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கைகளைக் கூட்டுத்தாபனம் மேற்கொள்ளவில்லை.

(க) கிம்புலாவெலயில் உள்ள கூட்டுத்தாபனத்திற்குரிய சிற்றுண்டிச்சாலையை கம்பனி ஒன்றிற்கு குத்தகைக்கு வழங்கியமையால் முன்னைய ஆண்டு தொடக்கம் கூட்டுத்தாபனம் அறவிட வேண்டியிருந்த ரூபா 24.58 மில்லியனை மீளாய்வாண்டின் இறுதியளவிலும் கூட்டுத்தாபனத்தால் அறவிட இயலவில்லை.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டம் | |
| (i) பிரிவு 2(ஆ)1 | தீவடங்கிலும் மாகாண மட்டத்தில் அமைந்துள்ள தாழ்ந்த வெற்றுக் காணிகள், வறண்ட அல்லது சேறு கலந்த காணிகள் என்பவற்றை இனங்கண்டு அத்துமீறிய காணி மீட்பைக் கட்டுப்படுத்தல் மற்றும் மேற்பார்வையிடல் என்பன சாத்தியமாகும் விதத்தில் அவற்றை வர்த்தமானி அறிவித்திலின் மூலம் பிரசித்தப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரம் உள்ளபோதும், மீளாய்வாண்டின் இறுதியில் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட மாகாணங்களின் எண்ணிக்கை 05 ஆக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | பிரிவு 8(அ) | அதிகாரச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக்குச் சுவீகரிக்கப்படும் காணியை கட்டிட நிர்மாண வேலைகளுக்கும் கைத்தொழில், வணிக மற்றும் கமத்தொழில் நடவடிக்கைகளது அபிவிருத்திக்கும் பயன்படுத்த வேண்டுமாயினும், அவ்வாறாக கூட்டுத்தாபனம் 1995 ஆம் ஆண்டின்போது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கெனச் சுவீகரித்த முத்துராஜவெல மற்றும் முதுன் எல பிரதேசத்தில் உள்ள 800 ஏக்கர் காணியில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அபிவிருத்தி செய்யப்பட்ட காணி 52 சதவீதமான 419 ஏக்கர் குறைந்த மட்டத்திலானதாகும். |
| (ஆ) | 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11(பீ) பிரிவு | நிதி அமைச்சரின் இணக்கத்துடனல்லாது பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் நிலையான மற்றும் குறுகிய கால முதலீட்டிலிடப்பட்ட தொகை ரூபா 3,123.12 மில்லியனாகும். |
| (இ) | 1982 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 8 ஏ பிரிவு | குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் அங்கீகாரமின்றி கூட்டுத்தாபனத்திற்கான புதிய பிரதான அலுவலகக் கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக எதிர்காலத்தில் அங்கீகாரத்தைப் பெறுவதன் பொருட்டு ஏறக்குறைய ரூபா 12.04 மில்லியன் பொறுப்பு ஏற்பட்டிருந்தது. |
| (ஈ) | 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 113 மற்றும் 173(2) ஆம் பிரிவுகள் | சுய வரி மதிப்பீட்டு அடிப்படையில் காலாண்டுக்கு ஒரு முறை வரி செலுத்தப்பட வேண்டுமாயினும், மீளாய்வு வரி ஆண்டிற்கு சுயவரி மதிப்பீட்டு அடிப்படையில் நான்காவது காலாண்டில் மாத்திரம் கூட்டுத்தாபனம் ரூபா 71,046,835 கொடுப்பனவு செய்திருந்தபோதும், மீளாய்வாண்டிற்கெனக் கொடுப்பனவு செய்ய வேண்டியவ வரி ரூபா 327,091,000 ஆகவுமிருந்தது. |
| (உ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை<br>-------------------------------------------------- | |
| | (i) திருத்தஞ் செய்யப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | • சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டில் 55 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 வரம்பை மீறி பணி நிமித்த இடைக் காலக் கட்டு நிதியாக ரூபா 11,676,147 வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே, நிதி வரம்பை மீறிக் கொடுப்பனவு செய்வதற்கான முன் கூட்டிய அனுமதி பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்படவில்லை |

- பணி நிமித்த இடைக் காலக் கட்டு நிதி ஏதாவது வழங்கப்படுவது விசேட பணிக்கேயாயினும், கூட்டுத்தாபனத்தின் சாதாரண நடவடிக்கைகளான நிர்மாண வேலைகள் மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகளுக்கும் மீளாய்வாண்டின்போது 36 சந்தர்ப்பங்களில் ரூபா 6,802,260 பணி நிமித்த இடைக் காலக் கட்டு நிதி வழங்கப்பட்டிருந்தது.

(ii) திருத்தஞ் செய்யப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5)

மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட பணி நிமித்த இடைக் காலக் கட்டு நிதியில் செலவழிக்கப்படாது எஞ்சிய 09 கட்டு நிதிகளுக்குரிய ரூபா 967,500 மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. மேலும், குறித்த பணி முடிவடைந்து 10 நாட்களுக்குள் அந்த இடைக் காலக் கட்டு நிதியை தீர்வு செய்ய வேண்டுமாயினும், தெரிவுச் செவ்வைக்குள்ளான 19 சந்தர்ப்பங்களில் ரூபா 791,800 இடைக் காலக் கட்டு நிதியைத் தீர்வு செய்வதில் 29 முதல் 221 நாட்கள் வரை கழிந்திருந்தன.

(ஊ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்

---

(i) திருத்தஞ் செய்யப்பட்ட நிதிப்பிரமாணம் 103

2010 தொடக்கம் இழப்பிற்குள்ளான ரூபா 399,677 கிரயமுடைய 11 டிரெக்டர் டிரெயிலர்களும் 2012 ஆம் ஆண்டில் இழப்பிற்குள்ளான ரூபா 7,651,700 கிரயமுடைய டிரெஜர் இயந்திரமும் தொடர்பாக பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச் சொத்துக்கள் கூட்டுத்தாபனச் சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாதுமிருந்தன.

(ii) நிதிப்பிரமாணம் 139

காசேட்டு மீதியைக் கவனத்திற் கொள்ளாது கூட்டுத்தாபனம் காசோலைகளை வழங்கியமையால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 31.79 மில்லியன் வங்கி மேலதிகப் பற்று மீதி இருந்தது.

(iii) நிதிப்பிரமாணம் 237

முற்பணம் திருப்பிச் செலுத்தப்பட்டதன் பின்னரும் வழங்குனரால் பொருட்கள் களஞ்சியத்தில் ஒப்படைக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டதன் பின்னருமே இறுதிக் கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டுமாயினும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்த 02 நீர்ப் பம்புகள் களஞ்சியத்தை வந்தடையும் முன்னரே அவ்வழங்குனருக்கு ரூபா 57.28 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) நிதிப் பிரமாணங்கள் 423 மற்றும் 431(3) என்பன

பல்வேறு பிணை முறிகள், வைப்புகள் மற்றும் முதலீடுகள் தொடர்பான முதலீட்டுப் பதிவேடு (Investment Register) ஒன்று பேணப்படவில்லை.

| | | |
|---|---|---|
| (v) | நிதிப்பிரமாணம் 571 | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலைகள் முடிவடைந்து 03 ஆண்டுகளுக்கு மேலாகிய 50 ஒப்பந்தங்களது நிறுத்தி வைத்த பணம் (Retentions) ரூபா 14.23 மில்லியன் ஆகும். இதனைத் தீர்வு செய்வதற்குக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (எ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையினது viii ஆம் அத்தியாயத்தினது 6.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் செப்டெம்பர், ஒக்டோபர், நவெம்பர் மாதங்களில் நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக மேலதிக நேர வேலைக்குரிய மணித்தியாலங்களைக் கருத்திற் கொள்ளாது இலக்குடனான மேலதிக நேர வேலை மணித்தியாலத்தின் (Target OT) அடிப்படையில் 23 ஊழியர்களுக்கு 1750 மணித்தியால வேலைக்குக் கூட்டுத்தாபனம் ரூபா 240,805 வழங்கியிருந்தது. |
| (ஏ) | 1993 நவெம்பர் 26 ஆந் திகதிய 794/23 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி | கூட்டுத்தாபனம் அகழ்ந்தெடுத்த 4,478,679 கியூபிக் மீட்டர் கடல் மணலுக்குச் செலுத்த வேண்டிய அரசிறை ரூபா 135.45 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது ரூபா 103.65 மில்லியன் மாத்திரமே. |
| (ஐ) | 1995 யூலை 12 ஆந் திகதிய எஸ்ஈ1/ஏ/4/34 ஆம் இலக்க அரச காணிகளைச் சுவீகரிப்பதற்கான வழி காட்டல் | (i) சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக காணிகளை வாடகைக் கொள்வனவில் வழங்கும்போது கூட்டுத்தாபனம் அரசாங்க பிரதான விலை மதிப்பீட்டாளரது மதிப்பிடப்பட்ட வாடகைக் கொள்வனவுப் பெறுமதி, விசேட குழு ஒன்றின் மூலம் மீண்டும் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) அவ்வாறே, கூட்டுத்தாபனம் 2007 ஆம் ஆண்டில் வீடமைப்புச் செயற்திட்ட நிர்மாண வேலைகளின் பொருட்டு கூட்டுத்தாபனத்திற்குரிய காணியை விற்பனை உடன்படிக்கையின் பேரில் தனியார் கம்பனி ஒன்றிற்கு வழங்கியபோதும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் கம்பனி அந்த வீடமைப்புச் செயற்திட்டத்தினது நிர்மாண வேலை நடவடிக்கைகளை ஆரம்பிக்காமையால் அக்காணியை மீண்டும் சுவீகரிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. |
| (ஒ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பிரிவு | திறைசேரியின் அங்கீகாரத்தை பெறாது பணிப்பாளர் சபையினது அங்கீகாரம் மாத்திரமே பெறப்பட்டு மீளாய்வாண்டின்போது பதவியணியினருக்குப் படியாக ரூபா 40.95 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஓ) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட எரிபொருள் வரம்பிற்கு அதிகமாகவும் குறித்த அங்கீகாரம் பெறப்படாமலும் மீளாய்வாண்டின்போது 21 கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களுக்கு ரூபா |

|  |  |
|---|---|
|  | 2,656,637 பெறுமதியான 24,560 லீட்டர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஔ) 2013 யூலை 08 ஆந் திகதிய அமப/13/0781/503/065 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | வேரஸ் கங்கை மழை நீர் வடிகால் மற்றும் சுற்றாடல் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களது கட்டிடங்களும் ஏனைய நிர்மாண அமைப்புகளதும் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 80 சதவீதம் முற்பணமாக வழங்கப்படுவதற்கு முன்னர் அந் நபர்களுடன் உடன்படிக்கைகளில் ஈடுபட வேண்டுமாயினும், அவ்வாறல்லாது மீளாய்வாண்டின் இறுதியளவில் கூட்டுத்தாபனம் வழங்கியிருந்த முற்பணம் ரூபா 76.72 மில்லியன் ஆகும். |

## 2.6 போதியளவு அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது பொதுத் திறைசேரியிடமிருந்து கூட்டுத்தாபனம் பெற்ற ரூபா 2,132.20 மில்லியன் மூலதன நிதியேற்பாட்டில் 25 சதவீதமான ரூபா 547 மில்லியன் முறையான அங்கீகாரமின்றி மேந்தலைச் செலவினமாகப் பெறப்பட்டிருந்தது. அவ்வாறே, பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி கூட்டுத்தாபனம் சேவைக் கட்டணமாக அறவிட்டிருந்த தொகை ரூபா 28 மில்லியன் ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் ரூபா 83,025,000 பெறுமதியான மிதக்கும் நீர் விசிறும் இயந்திரங்கள் மற்றும் 2 நடமாடும் நீர் விசிறும் இயந்திரங்கள் என்பவற்றைப் பொதுத் திறைசேரியின் நிதியேற்பாட்டின் மூலம் கொள்வனவு செய்திருந்தபோதும், அக்கொடுப்பனவுகளுக்கு முன்னர் அந்த இயந்திரங்களுக்கான தேவை மற்றும் இயந்திரங்களை எவ்விடங்களில் பயன்படுத்துவது என சாத்தியக்கூறு ஆய்வினை மேற்கொண்டிராததுடன், கொள்வனவுகளுக்கு பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இவ்வியந்திரங்கள் பயன்படுத்தப்படாது பாதுகாப்பில்லாது களஞ்சிய வளாகத்தில் இருந்தன.

(இ) பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் வேரஸ் கங்கை மழை நீர் வடிகால் மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி செயற்திட்டத்திற்குச் செலவழித்த மொத்தத் தொகையின் 17 சதவீதமாகிய ரூபா 84.90 மில்லியன் செயற்திட்ட முகாமைத்துவக் கட்டணமாக அறவிடப்பட்டிருந்ததுடன், 2014 தொடக்கம் அவ்வாறாக அறவிடப்பட்ட மொத்த முகாமைத்துவக் கட்டணம் ரூபா 313.14 மில்லியன் ஆகவுமிருந்தது. இதற்குப் புறம்பாக, செயற்திட்டப் பதவியணியினருக்கான சம்பளமாக செயற்திட்ட நிதியத்திலிருந்து ரூபா 111.35 மில்லியன் பெறப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின்போது முறையான அங்கீகாரமின்றி ஐக்கிய நாடுகளின் வெசாக் விழா நடைபெற்ற நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய காணியொன்றை சீர் செய்தமைக்காக கூட்டுத்தாபனம் ரூபா 11.20 மில்லியன் செலவழித்திருந்ததுடன், நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அறவிட வேண்டிய அத்தொகையை மீளளிப்புச் செயவதை அந்த அதிகாரசபை நிராகரித்திருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின்போது தொகுதியினதும் கூட்டுத்தாபனத்தினதும் வரிக்குப் பின்னரான இலாபம் முறையே ரூபா 1,080.54 மில்லியன் மற்றும் ரூபா 1,058.76 மில்லியன் என்பனவாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் இலாபம் முறையே ரூபா 1,221.28 மில்லியன் மற்றும் ரூபா 1,193.99 மில்லியன் என்பனவாகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் தொகுதியினதும் கூட்டுத்தாபனத்தினதும் நிதிப் பெறுபேறுகளில் முறையே ரூபா 140.74 மில்லியன் மற்றும் ரூபா 135.23 மில்லியன் நலிவு தென்பட்டது. கூட்டுத்தாபனத்தின் நிர்வாகச் செலவினம் ரூபா 133.22 அதிகரித்தும் மேம்பாட்டுச் செலவினம் ரூபா 108.52 மில்லியன் அதிகரித்துமிருந்தமையுமே இந்நலிவுக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் கூட்டுத்தாபன நிதிப்பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்யின் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 103.89 மில்லியன் மற்றும் ரூபா 346.69 மில்லியன் இலாபம் நிலவியபோதும், 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 157.89 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் அது ரூபா 1193.99 மில்லியன் இலாபமாகியதுடன் மீளாய்வாண்டின்போது இலாபம் ரூபா 1,058.76 மில்லியன் ஆகவுமிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேறுகளில் ஊழியர்களது ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி, நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்யும்போது கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு 2013 தொடக்கம் சார்புடைய பெறுமதியுடன் விளங்கியதுடன் மீளாய்வாண்டின்போது அது ரூபா 1,681.06 மில்லியன் ஆகியுமிருந்தது.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாப விகிதம் 11 சதவீதம் அதிகரித்திருந்தபோதும், கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் சம்பாதித்த இலாபம் 0.5 சதவீதம் குறைவடைந்திருந்தது. ஏனைய செயற்பாட்டு வருமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 100 சதவீதம் அதிகரித்திருந்தபோதும், நிர்வாகச் செலவினம் அடங்கலாக ஏனைய செயற்பாட்டுச் செலவினம் 30 சதவீதம் அதிகரித்தமையால் ஆண்டிற்கான நிகர இலாப விகிதம் 14 சதவீதம் ஆகியிருந்தது.

(ஆ) கடன்பட்டோர் புரள்வு விகிதம் மற்றும் கடன் சேகரிப்புக் காலம் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த மட்டத்திலேயே இருந்தன. இந்நிலைமையானது கடன் முகாமைத்துவச் செயற்பாட்டு நலிவாக மேலும் அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் மீட்பு மற்றும் அபிவிருத்திப் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ள காணிகளது மீட்பு மற்றும் அபிவிருத்தி மற்றும் அக்காணிகள், கட்டிடங்கள் என்பன கைத்தொழில், வணிக அல்லது கமத்தொழில் நடவடிக்கைகளுக்கு உகந்தவாறு அமைக்கப்படுதல், அக்காணிகளது பொறுப்பு, முகாமைத்துவம், நிர்வாகம், அக்காணிகளது மீட்பு மற்றும் அபிவிருத்திக்குப் பொறுப்பாக இருத்தல், பொறியியல் துறையில் நிர்மாணத்துறை நடவடிக்கைகளையும் மதியுரை வழங்கும் பணிகளைப்

பொறுப்பேற்றல் மற்றும் கால்வாய் பாதைகளை பொறுப்பேற்றல், அபிவிருத்தி செய்தல், பராமரித்தல், நிர்வகித்தல் மற்றும் கால்வாய்ப் பாதை மாசடைவதை தவிர்த்துக் கொள்ளல் என்பன கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கமும் பணியும் ஆகும். இந்நோக்கங்களை ஈடேற்றுவதிலான செயல் முன்னேற்றம் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 4.1.1 திட்டமிடல்

------------------------

கூட்டுத்தாபனம் 2017 - 2021 ஆண்டுகளுக்கான 04 ஆண்டு காலப்பகுதிக்குரிய கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரித்திருந்ததுடன், அது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பின்வரும் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்குரிய பணிகள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

(i) தீவடங்கிலுமான பாழடைந்த தாழ் நிலங்கள், செழிப்பற்ற அல்லது சேறு கலந்த காணிகளை இனங்கண்டு அத்து மீறிய காணி மீட்பைக் கட்டுப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கேற்றவாறு வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுதல்.

(ii) கால்வாய்களது கரைகளில் அமைந்துள்ள ஏதாவது காணியை கால்வாய் பிரதேசமாக இனங்கண்டு அப்பாதுகாப்புப் பிரசேத்தில் தற்காலிக அல்லது வேறு நிர்மாண வேலைகளைத் தடுப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுதல்.

(ஆ) கூட்டிணைந்த திட்டத்தினுள் இனங்காணப்பட்ட உபாய வழிகளை அடைவதற்கு கூட்டுத்தாபனம் போதிய நடவடிக்கை மேற்கொண்டிராததுடன், அறிமுகஞ் செய்யப்பட்ட செயலாற்றல் சுட்டுக்களின் (KPI) பிரகாரம் முன்னேற்றத்தைப் மதிப்பாய்வு செய்யவில்லை.

(இ) கூட்டிணைந்த திட்டத்தில் ரூபா 6036 மில்லியன் பெறுமதியான செயற்திட்டம் உள்ளடங்கியிருந்தபோதும், அவை எவை என்பதை முகாமைத்துவம் நிச்சயமாக இனங்கண்டிருக்கவில்லை.

(ஈ) கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடங்கியதும் 2018 முதல் கூட்டுத்தாபனம் அமுலாக்க வேண்டியதுமான சொந்த செயற்திட்டங்களைப் (Own Project) போன்றே நிர்மாணச் செயற்திட்டங்கள் எவை என்பதை இனங்கண்டிருக்கவில்லை.

(உ) கூட்டிணைந்த திட்டத்தில் மீளாய்வாண்டின் பொருட்டு இனங்காணப்பட வெண்டிய செயற்திட்டங்களுக்கு ரூபா 658.17 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது மொத்தச் செயற்திட்டக் கிரயத்தின் 10 சதவீதமாகும்.

(ஊ) கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடங்கிய சகல செயற்பாடுகளும் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 8 ஆம் 9 ஆம் பிரிவுகளின் கீழ் இனங்காணப்பட்டிருந்தபோதும், அதிகாரச்சட்டத்தின் ஏனைய பிரிவுகளின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் குறிப்பிடப்படவில்லை.

### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1996 ஆம் ஆண்டின் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பாரிய கொழும்பு வெள்ளக் கட்டுப்பாட்டு மற்றும் சுற்றாடல் முன்னேற்றச் செயற்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியின் மேற்குப் புற எல்லையில் அமைந்துள்ள ஏறக்குறைய 1000 ஏக்கர் தாழ்ந்த நிலத்தை நீர் தேங்கும் பிரதேசமாக பாதுகாப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான பணி அதனுடன் தொடர்புடைய விசேட நிறுவனமாகிய இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட காணிகளில் அத்து மீறிய காணி மீட்பு என்பவற்றை அகற்றும் முழுப் பொறுப்பும் (Sole Responsibility) கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ஏறக்குறைய 62 ஏக்கர் காணி அத்துமீறிக் குடியேறியவர்கள் வசமாக இருந்ததுடன் 79 ஏக்கர் காணியை கூட்டுத்தாபனம் திசை திருப்பியும் இருந்ததால் (Divesting) அமைச்சரவை கூட்டுத்தாபனத்தால் நிறைவேற்றப்படுவதற்கு எதிர்பார்த்த பணிகளை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. மேற்படி காணிகளை இழந்ததற்கு ஒப்பாக மழை நீர் வெளியேறும் ஆற்றலை அதிகரிப்பதற்கான போதியளவு நடவடிக்கைகளைக் கூட்டுத்தாபனம் எடுக்காமையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட நேரடியாக ஏதுவானது. அவ்வாறே, அத்துமீறிக் குடியேறியோரது காணிகளது எல்லைகளை மீண்டும் அமைப்பது 2013 ஆம் ஆண்டில் ஆரம்பமாகியபோதும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அப்பணி நிறைவடையாதிருந்தது. அடையப் பெற்ற பௌதீக முன்னேற்றம் 50 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனம் 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள நீர் தேங்கும் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள 1321 அத்துமீறிய நிர்மாண வேலைகள் மற்றும் காணி மீட்பு என்பவற்றை இனங்கண்டிருந்தபோதும், இனங்காணப்பட்ட அந்நிர்மாண வேலைகளை அப்புறப்படுத்தத் தவறியிருந்தது.

(இ) மீளாய்வாண்டின்போது புதிய வியாபார முன்மொழிவுகளை கூட்டுத்தாபனத்திற்குரிய கிரிமண்டல மாவத்தையிலும் ராகம காணிகளிலும் 02 வீடமைப்புத் திட்டங்களை அமைப்பதற்குக் கூட்டுத்தாபனத்தின் திட்டமிடல் மற்றும் வியாபார அபிவிருத்திப் பிரிவு திட்டமிட்டிருந்தபோதும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அவ்வீடமைப்புத் திட்டங்களுக்குரிய திட்டம் தயாரிக்கப்படாதிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் பெற்ற ஒப்பந்தங்களில் 70 சதவீதமாகிய 84 ஒப்பந்தங்கள் உப ஒப்பந்தகாரர்களின் மூலம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் பிரதான நோக்கமான ''கட்டிடப் பொறியியல் மற்றும் நிர்மாண வேலைகளைப் பொறுப்பேற்றல் நிர்மாணத் துறையில் போட்டியிடும் நிறுவனமாக அமைதல்'' எனும் நோக்கம் நிறைவேறாதிருந்தது.

(உ) மீளாய்வாண்டின்போது ஒலியமுல்ல நீர் பாய்ச்சும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்திற்கு கூட்டுத்தாபனம் ஏற்பாடு செய்திருந்த நிதி ரூபா 800 மில்லியனாகும். அதன் நிதிசார் முன்னேற்றம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 799.97 மில்லியன் ஆகவிருந்தது. இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) குறித்த செயற்திட்டத்திற்குத் தேவையான காணியை சுவீகரிப்பதற்கும் வீடற்றோருக்கு புதிய வீடுகளை வழங்குவதற்குமென மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் கொடுப்பனவு செய்யாத தொகை ரூபா 615 மில்லியனாகும். எனினும், நிதிசார் முன்னேற்றத்தில் அது கொடுப்பனவு செய்யப்பட்ட பெறுமதியாகக் காட்டப்பட்டிருந்தது.

(ii) செயற்திட்டத்தின் காரணமாக அப்புறப்படுத்தப்படவிருந்த குடும்பங்கள் தொடர்பாக கூட்டுத்தாபனம் தயாரித்த பதிவேட்டில் சில இழப்பீட்டாளர்களது தீர்வை வரி இலக்கம், அவர்களது பெயர்கள், முகவரிகள் என்பன குறிப்பிடப்பட்டிராததுடன், சில முகவரிகள் இரு தடவைகள் பதிவு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக இப் பதிவேடுகள் சரியானவையா என்பது கணக்காய்வில் கேள்விக்குரியதாகியது.

(iii) அவ்வாறே, செயற்திட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனம் முதல் கட்டத்தில் இனங்கண்டிருந்த வீடுகளை இழப்போரது எண்ணிக்கை 201 ஆகும். எவ்வாறாயினும், அதன் பொருட்டு 205 வீடுகளை ஒதுக்கீடு செய்யுமாறு கூட்டுத்தாபனம் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் கோரியிருந்தமை கணக்காய்வில் சர்ச்சைக்குரியதாக விளங்கியது. மேலும், செயற்திட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு அல்லது வீடுகளை இழப்போருக்கு புதிய வீடுகளை வழங்குவதற்குப் பொதுத் திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவுமில்லை.

(iv) குறித்த செயற்திட்டத்தின் செலவின மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாத கூட்டுத்தாபனத்தின் மேந்தலைச் செலவினத்திற்கு ரூபா 112,264,131, அதாவது, மொத்தக் கிரயத்தில் 17 சதவீதத்தைப் பெறுவதற்கு கூட்டுத்தாபனம் எதிர்பார்த்திருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் ரூபா 1,484.81 மில்லியன் பெறுமதியான 31 செயற்திட்டங்களை முற்றாக பூர்த்தி செய்வதற்குத் திட்டமிட்டிருந்தபோதும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அவற்றினது பௌதீக முன்னேற்றம் 9 முதல் 75 சதவீதம் வரையிலான குறைந்த மட்டத்தில் அமைந்திருந்தது.

(எ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் ரூபா 776.42 மில்லியனிலான 07 செயற்திட்டங்களை அமுல்படுத்துதற்குத் திட்டமிட்டிருந்தபோதும், அச் செயற்திட்டங்களை அமுலாக்காது செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்காத 26 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ரூபா 903.54 மில்லியனைச் செலவிட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு இனங்காணப்பட்ட செயற்திட்டங்களது எண்ணிக்கை 46 ஆகுமாயினும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனம் ரூபா 2,104 மில்லியன் கிரயமுடைய 81 செயற்திட்டங்களை அமுலாக்கியிருந்ததுடன், 40 மேலதிக செயற்திட்டங்களை அமுலாக்கியதற்கு எவ்வாறு நிதியேற்பாடு செய்யப்பட்டது என்பதை கணக்காய்வில் உணர முடியாதிருந்தது.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

---------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிட்டகோட்டேயில் உள்ள 9 ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள ஏறக்குறைய 05 ஏக்கர் காணியில் சிறந்த வீடமைப்புத் திட்டத்தை நிர்மாணிப்பதற்குக் கூட்டுத்தாபனம் 2007 ஆம் ஆண்டில் அபிவிருத்தியாளர் ஒருவருடன் விற்பனை உடன்படிக்கையை மேற்கொண்டிருந்தது. அது 2010 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வேண்டியதாகும். இக்காணியை அபிவிருத்தி செய்வதற்கு அபிவிருத்தியாளரிடமிருந்து முற்பணமாக ரூபா 489 மில்லியன் பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவிலும் குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அபிவிருத்தியாளர் மேற்கொண்டிராதபோதும், குறித்த உடன்படிக்கையை இரத்து செய்யாததன் காரணமாக மீண்டும் இக்காணியைப் பொருத்தமான ஒரு அபிவிருத்தியாளரிடம் ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பத்தை கூட்டுத்தாபனம் இழந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வெண் தாமரை வீடமைப்புச் செயற்திட்டத்தின் மூலம் வீடுகளைப் பெற்றவர்களிடமிருந்து பெற வேண்டிய தவணைப் பண நிலுவை மற்றும் வட்டி ரூபா 22.34 மில்லியன் ஆகும். இதனை அறவிடுவதற்கு உடன்படிக்கையின் பிரகாரமான நிபந்தனைகளுக்கமைய கூட்டுத்தாபனம் சட்டபூர்வ நடவடிக்கைகள் எதனையும் மேற்கொண்டிராததுடன், அத்தொகையில் ரூபா 21.88 மில்லியனிற்கு நட்டக் கடனுக்கான நிதியேற்பாட்டை மேற்கொண்டுமிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கித்தம்பஹுவ கால்வாய் பாதுகாப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள 05 காணிகள் வருடாந்தக் குத்தகை அடிப்படையில் குத்தகையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனம் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் அவர்களுடன் குத்தகை உடன்படிக்கைகளில் ஈடுபடாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு குத்தகை வாடகை வருமானமாக ரூபா 630,000 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் கதிர்காமம் மற்றும் நுவரெலியா சுற்றுலா விடுதிகளிலிருந்து சேகரித்த வருமானம் ரூபா 3.25 மில்லியனாகும். எவ்வாறாயினும், அவை தொடர்பான செலவினம் ரூபா 7.46 மில்லியன் ஆகியமையால் ஏற்பட்ட திரண்ட நட்டம் ரூபா 4.21 மில்லியனாகும். செலவிற்கேற்ற கட்டணத்தை அறவிடும் வழிவகையை முகாமைத்துவம் இனங்காணத் தவறியமையே இந்நிலைமைக்கான காரணமாகும்.

(உ) கொழும்பை அண்மித்த நகர்ப்புற அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் 2014 ஆம் ஆண்டின்போது கூட்டுத்தாபனத்திடம் சட்டபூர்வமாக ஒப்படைக்கப்பட்டிருந்த ஜீப் வண்டி மீண்டும் அச்செயற்திட்டத்தால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியிலேனும் அதனைத் திரும்பிப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஊ) லுனாவை செயற்திட்டத்தின் கீழ் கூட்டுத்தாபன நடவடிக்கைகளுக்காக 2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 02 வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் நீர் வழங்கல் அமைச்சின் பாவனையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தபோதும், அவ்வாகனங்களைத் திருப்பி பெறுவதற்குக் கூட்டுத்தாபனம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(எ) தற்போது நடைபெறும் அத்துமீறிய காணி மீட்பு நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்வதற்குக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாதிருப்பதால் அப்பிரிவுகளில் மாற்றம் ஏற்படுத்தி அதிகாரச் சட்டத்தை திருத்தஞ் செய்வதற்கு 2012 ஆம் ஆண்டின்போது அமைச்சரவைக்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அதிகாரச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறே, அதிகாரச் சட்டத்தில் நிலவும் இவ்வாறான குறைபாடுகள் காரணமாக அத்துமீறிய காணி மீட்பு நடவடிக்கைகள் சம்பந்தமாகப் பெறப்படும் புகார்களுக்குப் போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின்போது 4 மில்லியன் கியூபிக் மீட்டர் கடல் மணலை பெறுவதற்குக் கூட்டுத்தாபனம் ரூபா 4,000 மில்லியன் வங்கிக் கடனைப் பெறும் செயற்திட்ட மதிப்பாய்வின்போது (Project Appraisal) எதிர்வரும் ஆண்டுகளில் கடல் மணலின் விற்பனையை முன் கூட்டியே உணர்வதற்கான நிச்சயமான கொள்வனவாளர்களையும் விற்பனையின் அளவையும் இனங்காணாது கூட்டுத்தாபனத்தின் தற்போதைய விற்பனையின் அடிப்படையில் ஓரளவு சதவீத அதிகரிப்பை மாத்திரமே மேற்கொண்டு விற்பனையின் அளவைத் தீர்மானித்திருந்தது.

இந்நிலைமையில், எதிர்பார்த்த விற்பனையை கூட்டுத்தாபனம் பெறுவதற்கு இயலாமல் போனால், பெற்ற கடனையும் அதற்கான வட்டியையும் திருப்பிச் செலுத்துவது பிரச்சினைக்குரியதாகும் என அவதானிக்கப்பட்டது. உதாரணமாக, செயற்திட்ட மதிப்பாய்வின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டின்போது கழுவியெடுத்த

(Washed and Sieved) 257,238 கியூப் மணலை விற்பனை செய்ததன் மூலம் ரூபா 1,993,59 மில்லியன் விற்பனை வருவாயைப் பெறலாம் என எதிர்பார்த்தபோதும், 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் 33,435 கியூப் மணலே விற்பனை செய்யப்பட்டிருந்தது. மேலும், பெறப்பட்ட கடனானது கூட்டுத்தாபனத்தின் நிகர சொத்துக்களது 87 சதவீதமான கூடிய பெறுமதியுடையதாக இருந்ததால் கூட்டுத்தாபனத்தின் திரவவியல் சொத்துக்கள் சாதகமற்றவாறு பாதிப்படைந்திருந்தன.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் கெரவலபிட்டிய கழிவுப் பொருள் கூடத்தில் உள்ள கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தியமையால் பெற்ற வருமானம் ரூபா 466,431,038 ஆகுமாயினும், அதில் ரூபா 355,098,116, அதாவது வருமானத்தில் 76 சதவீதத்தை அறவிடுவதற்குக் கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 28 ஆந் திகதியன்று கூட்டுத்தாபனத்திற்குரிய தெஹிவளை அத்திடியவில் உள்ள 180 பெர்ச்சர்ஸ் காணியைத் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு குத்தகைக்கு வழங்குகையில் காணியின் தற்போதைய பெறுமதியை அரசாங்க விலை மதிப்பீட்டாளரிடமிருந்து பெறாது முன்னைய ஆண்டில் அதனையடுத்துள்ள காணியைக் குத்தகைக்கு வழங்குகையில் கூட்டுத்தாபனம் பெற்றிருந்த விலை மதிப்பீட்டின் அடிப்படையில் இக்காணியும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கொழும்பு 05, கிரிமண்டல மாவத்தையில் அமைந்துள்ள 31.91 பேர்ச்சர்ஸ் காணியைக் குத்தகைக்கு வழங்குகையில் பெறப்பட்ட வருடாந்த அரசாங்க குத்தகை மதிப்பீடு ரூபா 2,610,000 ஆகுமாயினும், பணிப்பாளர் சபை அந்த அரசாங்க விலை மதிப்பீட்டை ரூபா 326,250 ஆகக் குறைத்து குத்தகையாளர்களிடமிருந்து பெறுவதற்கு தீர்மானித்திருந்தது. அவ்வாறே, இக்காணி குத்தகையாளரால் மீளாய்வாண்டின் சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் பயன்படுத்தப்பட்டிருந்தபோதும், 2018 செப்டெம்பர் மாதமளவிலும் கூட்டுத்தாபனத்துடன் சட்டபூர்வ உடன்படிக்கையில் ஈடுபட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் பயன்படுத்த முடியாத பொருட்களை ஏலத்தில் கைதவிர்ப்புச் செய்தபோது ரூபா 1,460,000 மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 04 பொருட்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட கொள்வனவாளர்கள் சமர்ப்பித்திருந்த கேள்விகளுக்குரிய பெறுமதி ரூபா 2,831,677 ஆகியபோதும், அவர்கள் அவ்விலைக்கு அப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஏலத்தில் விற்பனை செய்யப்படும் பொருட்களது தன்மை, பெறுமதி என்பன வெவ்வேறாக இனங்காணப்படாதும் கைதவிர்ப்புச் செய்யப்படவுள்ள சகல பொருட்களுக்கும் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 1 சதவீத திருப்பிச் செலுத்தப்படும் வைப்பை பெறுவதற்கும் கூட்டுத்தாபனம் தீர்மானித்திருந்தமையே இந்நிலைமைக்கான காரணமாகும்.

(க) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனத்தின் சேவைப் பிரிவால் பழுதுபார்க்கப்படுவதற்காக அனுப்பி வைக்கப்பட்ட 20 வாகனங்களுக்கு 3 முதல் 10 மணித்தியாலங்கள் வரை கழித்திருந்தபோதும், அவ்வாகனங்களைத் திருப்பி ஒப்படைப்பதில் 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கழித்திருந்தமை கணக்காய்வில் கேள்விக்குரியதாக விளங்கியது. மேலும், மீளாய்வாண்டின் செப்டம்பரின்போது சேவைப் பிரிவின் 25 ஊழியர்கள் வேலை செய்த நேரம் 1302 மணித்தியால மேலதிக நேர வேலையுடன் ஒரு சேர 5343 மணித்தியாலங்களாகியபோதும், அம்மாதத்தின்போது உள்ளவாறு 1240 மணித்தியாலங்களே பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பொருட்டுக் கழிந்திருந்தமையால் அம்மாதத்தின்போது ஊழியர்கள் செயற்படாதிருந்த நேரம் 4103 (Idle Time) மணித்தியாலங்கள் ஆகும். இந்நிலைமைக்கேற்ப கூட்டுத்தாபனத்தின் சேவை மற்றும் பராமரிப்புப் பிரிவினது நடவடிக்கைகள் வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமான முகாமைத்துவத்துடனும் இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ங) காணி மீட்பு மற்றும் நிர்மாண வேலைகளுக்கு கடல் மணலை விற்பனை செய்வது கூட்டுத்தாபனத்தின் பிரதான வருமானத் தோற்றுவாய் ஆகியபோதும், கூட்டுத்தாபனம் கடல் மணல் சம்பந்தமாக சிறந்த கையிருப்பு முகாமைத்துவத்தைக் கடைப்பிடிக்காமையால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு விற்பனைக்கிருந்த கடல் மணல் கையிருப்பு முடிவடைந்தவாறிருக்க அதனை முன் கூட்டியே அறிந்திராது மீளாய்வாண்டின்போது கடல் மணல் அகழ்வுக்கு ஒப்பந்தகாரர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு கூட்டுத்தாபனம் அவசரமாக கூறு விலைகளைக் கோரியிருந்ததுடன், கூறு விலைகளைச் சமர்ப்பிப்பதற்கு 2017 மே 30 முதல் 2017 ஆகஸ்ட் 30 வரை 03 மாத கால அவகாசம் வழங்கியிருந்தது. இதன் பொருட்டு 04 கூறு விலையாளர்கள் கூறு விலைகளைச் சமர்ப்பித்திருந்ததுடன், கூட்டுத்தாபனத்தின் மணல் கையிருப்பு முடிவடைந்தவாறு இருப்பதால் குறைந்த கூறு விலையாளரது தகைமைகளை மேற்கொண்டும் பகுப்பாய்வு செய்வதற்குப் போதிய கால அவகாசம் கூட்டுத்தாபனத்திற்குக் கிடையாது எனும் அடிப்படையில் அக்கூறுவிலையாளர் நீக்கப்பட்டிருந்ததுடன், இரண்டாவது கூறு விலையாளர் செயற்திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இவ்வாறு இக் கூறுவிலையாளர் நீக்கப்பட்டதனால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட இழப்பு 800,000 அமெரிக்க டொலர்களாகும்.

மேலும், கடல் மணலைப் பெற்றவுடனேயே அதனை நிர்மாண வேலைகளுக்குப் பயன்படுத்த முடியாதாகையால் அம்மணலைக் கழுவி விற்பனை செய்வதற்குக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன், 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமளவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மணல் 185,552 கியூப் ஆகியபோதும், கழுவி விற்பனை செய்யப்பட்ட கடல் மணல் 45,973 கியூப் மாத்திரமே. இப்பணி எந்தளவுக்கு செயல்முறைப்படுத்தப்பட்டு இலாபகரமாக அமையலாம் என்பது கணக்காய்வில் கேள்விக்குரியதாகியது.

(ச) செயற்திட்டங்களது பௌதீக முன்னேற்றத்தைப் பகுப்பாய்வு செய்வதற்குக் கூட்டுத்தாபனம் முறையான விதி முறைகளைக் கடைப்பிடிக்காமையால் மீளாய்வாண்டின் இறுதியளவில் கூட்டுத்தாபனம் அமுல்படுத்திய செயற்திட்டங்களது பௌதீக முன்னேற்றத்தைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்குக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் தவறியிருந்தது. செயற்திட்டங்களது நிதிசார் முன்னேற்றம் மாத்திரமே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, செயற்திட்டங்களது பௌதீக முன்னேற்றம் தொடர்பாக முறையாக உணராது நிதிசார் முன்னேற்றம் மாத்திரமே கருத்திற் கொள்ளப்பட்டு கூட்டுத்தாபனத்தின் செயற்திட்டங்களை எவ்வாறு முகாமையிடுவது என்பதும் கணக்காய்வில் கேள்விக்குரியதாகியது. இந்நிலைமைக்கேற்ப, கூட்டுத்தாபனம் அமுலாக்கும் அநேக செயற்திட்டங்களது செயலாற்றல் குறைந்த மட்டத்திலேயே இருந்தன.

(ஞ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பெல்லன்விலயில் அமைந்துள்ள 04 விற்பனைக் கூடங்கள் மீளாய்வாண்டின் மே மாதம் தொடக்கம் வாடகை அடிப்படையில் வழங்கப்படுவதற்கான நடவடிக்கையின்றி மூடப்பட்டிருந்தன. குத்தகை நிலுவையாக ரூபா 717,623 அறவிடப்பட வேண்டியிருந்தது. கூட்டுத்தாபனம் குத்தகையாளர்களுடன் முறையான உடன்படிக்கையில் ஈடுபடாது விற்பனைக் கூடங்களைக் குத்தகைக்கு வழங்கியமையால் இத்தொகையை அறவிட முடியாதிருந்தது.

(ட) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனத்தின் இயந்திரசாதன மற்றும் உபகரண பிரிவுக்குச் சொந்தமான 95 கனரக வாகனங்கள் (Heavy Vehicles) 162,000 மணித்தியாலங்களுக்குச் செயற்படக் கூடிய நிலைமையில் இருந்தபோதும், உள்ளவாறு 116,328 மணித்தியாலங்களே செயற்பட்டதன் காரணமாக 45,672 மணித்தியாலங்கள் செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், இயந்திரங்களது செயற்படாத காலம் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்படாமையால் மீளாய்வாண்டின்போது இந்த இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியமையால் கூட்டுத்தாபனம் குறைந்த மட்டத்திலான ரூபா 13,996,352 வருமானத்தையே பெற்றிருந்தது.

(ண) தியத உயன புகையிரத சிற்றுண்டிச்சாலையில் உள்ள பொருட் பட்டோலையில் அடங்கும் 10 பொருட்கள் வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனியால் முறையான அறிவித்திலின்றி அகற்றப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அப்பொருட்களை மீண்டும் பெற்றுக்கொள்வதற்குக் கூட்டுத்தாபன முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(த) பாரிய கொழும்பு வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் முன்னேற்ற செயற்திட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்ட 378 ஹெக்டேயார் காணி 1996 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய 96/1760/111/125 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் குறுகிய கால குத்தகைக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளைக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டிராமையால் சேகரிக்கக் கூடியதாகவிருந்த குத்தகை வாடகை வருமானத்தை 20 ஆண்டுகளுக்கு மேலாக சேகரிக்க முடியாதிருந்தது.

(ந) தியத உயன புகையிரத சிற்றுண்டிச் சாலையை குத்தகைக்கு வழங்குவதற்கு கூட்டுத்தாபனம் கூறு விலைகளைக் கோரியிருந்தபோதும், மீளாய்வாண்டின்போது அதனைக் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட வருமான இழப்பு ரூபா 12.12 மில்லியனாகும்.

(ப) கூட்டுத்தாபனம் வெளி நபர்களுக்கு இயந்திரங்களையும் உபகரணங்களையும் வாடகைக்கு வழங்கும்போது நாளொன்றுக்குக் குறைந்தத 04 மணித்தியாலங்களுக்கான கட்டணத்தை அறவிட வேண்டுமாயினும், 07 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தாபனம் வழங்கிய இயந்திரங்களுக்கு அவ்வாறு கட்டணத்தை அறவிடாததால் ஏற்பட்ட இழப்பு ரூபா 205,400 ஆகும்.

(ம) கூட்டுத்தாபனம் புதிய வியாபார துறைகளாக கடல் மணலைக் கழுவி விற்பனை (Washed and Sieved) செய்யவும் மத்தியதர வகுப்பினருக்கு ராகம பிரதேசத்தில் 400 வீடுகளை நிர்மாணிப்பதற்குமான செயற்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்தபோதும், இச்செயற்திட்டங்கள் வெற்றியளிக்குமா என்பதற்கான சந்தை ஆய்வை (Market Survey) காலத்துக்கேற்ப மேற்கொள்ளவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த ஆண்டுகளில் கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டதற்கான மூல நோக்கங்களுக்குப் புறம்பாக பொதுத் திறைசேரியினது மானியத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுலாக்குவதற்கும் கடல் மணலை விற்பனை செய்வதற்கும் கூட்டுத்தாபனம் காணிகளை விற்பனை செய்வதற்கும் அதே போன்று நெடுந் தவணைக் குத்தகைகளை வழங்கி வருமானத்தை ஈட்டுவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. கடந்த 5 ஆண்டுகளின் போது இந்த வருமானத் தோற்றுவாய்கள் மூலம் பெற்ற வருமானம் மொத்த வருமானத்தில் 50 சதவீதத்திற்கும் 81 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக இருந்தது.
இந்நிலைமையின் கீழ் கூட்டுத்தாபனத்தால் சமுதாயத்திற்கு நிறைவேற்றப்பட வேண்டிய தாழ் நிலங்களை இனங்கண்டு அவற்றை பிரசித்தப்படுத்தலானது 05 மாகாணங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. தேசியமட்டத்தைப் போன்றே பிரதேச மட்டத்திலும் ஏற்படும் அபிவிருத்திப் பணிகளின் காரணமாக ஏற்படும் காணிப் பயன்பாட்டு அமைப்பில் ஏற்படும் மாற்றங்களால் இயற்கையாக வழிந்தோடும் மழை நீர்ப் பாதைகளுக்கும் சுற்றாடலுக்கும் ஏற்படும் சாதகமற்ற விளைவுகளைக் குறைப்பதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரித்தல், முறையற்ற நகரமயமாக்கலால் ஏற்படும் வெள்ளப்பெருக்கைக் குறைத்துக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிக்கும் பணிகள் என்பன குறைவாகவே நடைபெற்றிருந்தன. மேலும், மேற்படித் திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான தரவுகளான கால்வாய்ப் பாதைகளது நீர் மட்டம், நீரோட்டத்தின்

ஆற்றல், மழை வீழ்ச்சிப் போக்கு போன்ற தரவுகளைச் சேகரிப்பதற்குக் கூட்டுத்தாபனம் போதிய கவனம் செலுத்தியிருக்காததுடன், தரவுகளைச் சேகரிப்பதன் பொருட்டு வருடாந்தம் பொதுத் திறைசேரியிடமிருந்து நிதியை பெற்றுமிருந்தது.

அவ்வாறே, 2003 ஆம் ஆண்டில் ஜய்கா (Jica) நிறுவனத்தால் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட கொழும்பு நகரையும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் நிறுவப்பட்டிருந்த நீர் மானிகளையும் மழைவீழ்ச்சி மானிகளையும் பராமரிப்பதற்கும் கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டில் கைதவிர்ப்புச் செய்வதற்கென இனங்காணப்பட்ட 100 பொருட்களிலும் உபகரணங்களிலும் 19 பொருட்களும் உபகரணங்களும் மீளாய்வாண்டின் இறுதியிலேனும் கைதவிர்ப்புச் செய்யப்படாது களஞ்சியத்தில் இருந்தன.

(இ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் பொதுத் திறைசேரியினது மானியத்தின் மூலம் ரூபா 64.72 மில்லியன் பெறுமதியான 10,600 கேபியன் பெட்டிகளைக் கொள்வனவு செய்திருந்தபோதும், கூட்டுத்தாபனத்தின் கேபியன் சுவர்களை அமைக்கும் வேலை உப ஒப்பந்தகாரரால் நடைபெறுவதால் இவ்வாறு கேபியன் பெட்டிகளை பெருமளவில் கொள்வனவு செய்வதற்கான தேவையைக் கணக்காய்வில் புரிந்து கொள்ள முடியவில்லை. மேலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 8,074 கேபியன் பெட்டிகள் பயன்படுத்தப்படாதிருந்தன. அவை கொள்வனவு செய்யப்பட்டவற்றின் 76 சதவீதம் ஆகும்.

(ஈ) 1981 தொடக்கம் 2005 வரையான காலப்பகுதியின்போது கூட்டுத்தாபனம் சுவீகரித்திருந்த காணிகளுக்குரிய இழப்பீட்டுத் தொகையை காலத்துக்குக் காலம் கொடுப்பனவு செய்வதற்கான நடவடிக்கையை எடுக்காமையால் அக்காணிகளின் பொருட்டு மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 62.25 மில்லியன் இழப்பீடாக வழங்கப்பட வேண்டியிருந்ததுடன், அதற்குரிய வட்டி ரூபா 106.90 மில்லியன் ஆகவுமிருந்தது. இது கொடுப்பனவு செய்யவேண்டிய இழப்பீட்டுத் தொகையின் 172 சதவீதமாகும். குறித்த இழப்பீட்டை வழங்குவதைத் துரிதப்படுத்தி வட்டியைக் குறைத்துக் கொள்ளும் நோக்கில் பிரதேச செயலகங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்பு இல்லாதிருந்தமை இந்நிலைமைக்கான ஏதுவாக இருந்தது. அவ்வாறே, காணிச் சுவீகரிப்புக்கு 12 முதல் 36 ஆண்டுகள் கழிந்திருந்தமை காரணமாக அக்காணிகளில் அத்துமீறிய குடியேற்றம் ஏற்பட்டிருந்தமையும் தெரிய வந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் மேற்பார்வையிலும் நிர்வாகத்திலும் உள்ள 40 ஏக்கர் நீர்த் தேக்கப் பிரதேசத்தில் அத்துமீறிக் குடியேறியிருந்த 464 குடும்பங்களது பல்வேறு செயற்பாடுகளின் நிமித்தம் நீர்த் தேக்கப் பிரதேசம் அசுத்தமடைவதுடன் மண்ணால் நிரப்பப்படுவதால் இக்காணிகளது எல்லைகளை நிச்சயமாகக் குறிப்பிடும் விதத்தில் எல்லைத் தூண்கள் நடப்படாமை மற்றும் நடப்பட்ட தூண்களினது முறையான பாதுகாப்புத் தொடர் நடவடிக்கைகளும் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படாது இருந்தமை இந்நிலைமைக்கான காரணமாக அமைந்தது.

(ஊ) காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் பல்வேறு நபர்களும் கூட்டுத்தாபனத்திற்குச் சமர்ப்பித்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 515 ஆகும். அதில் 307 விண்ணப்பங்கள் தொழில்நுட்பக் குழுவுக்கு அனுப்பப்பட்டு அவற்றுள் 41 விண்ணப்பங்களுக்கு மாத்திரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(எ) பாரிய கொழும்பு வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் முன்னேற்றச் செயற்திட்டத்தின் கீழ் நீர்த் தேக்கப் பிரதேசங்களை வேறுபடுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தால் சுவீகரிக்கப்பட்ட நாவெல - ஹீன் எல நீர்ப் பாதுகாப்புப் பிரதேசத்தில் உள்ள 02 ஹெக்டயர் காணியில் ரூபா 161.23 மில்லியன் செலவில் கூட்டுத்தாபனம் கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைத்திருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் இவ்விளையாட்டரங்கு பயன்படுத்தப்படாதிருந்தது.

## 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு முரணாக 2014 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் முன்னாள் அரசியல்வாதி ஒருவரது ஞாபகார்த்த அருங்காட்சியகத்துடன் கூடிய உருவச் சிலையை அம்மாவட்டத்தில் அமைப்பதற்கு கூட்டுத்தாபனம் அறவிட வேண்டியிருந்த தொகை ரூபா 31.31 மில்லியன் ஆகும். பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய பிரசித்திபெற்ற கலைஞர்களது பல்வேறு கலை நிகழ்ச்சிகளினூடாக இத்தொகையைச் சேகரிக்க வேண்டியபோதும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அவ்வாறு பணம் சேகரிக்கப்படவில்லை. மேலும், நிர்மாண வேலைகளுக்கான பொருட் கொள்வனவுகளுக்கு கூட்டுத்தாபனம் இலங்கை கடற்படைக்கு ரூபா 25 மில்லியன் முற்பணமாக வழங்கி பொருட்களைப் பெற்றுக்கொண்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அந்த முற்பணம் தீர்வு செய்யப்படாதிருந்தது.

(ஆ) உப ஒப்பந்தகாரர்கள் செய்த வேலையைச் சான்றுறுதிப்படுத்தாதும் அளவைகளைக் குறிக்கும் பத்திரங்களைப் பெறாமலும் ஒப்பந்தகாரர்கள் கோரியவாறு வேரஸ் கங்கை மழை நீர் வடிகால் மற்றும் சுற்றாடல் முன்னேற்றச் செயற்திட்டத்தின் பொருட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 29.18 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் தியத உயன புகையிரத சிற்றுண்டிச் சாலை மற்றும் பப் (Pub) கூடத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனிக்கு ஒப்படைக்கும் நடவடிக்கைகள் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சிற்றுண்டிச் சாலையையும் பப் கூடத்தையும் அபிவிருத்தி செய்வதற்குக் கூட்டுத்தாபனம் செலவிட்ட அபிவிருத்திச் செலவினம் ரூபா 125.44 மில்லியனாகும். இதனை அறவிடுவதற்கு 2017 சனவரி 17 ஆந் திகதி கம்பனியுடன் இணக்கம் ஏற்பட்டிருந்தபோதும், அந்த அபிவிருத்திச் செலவினத்திற்குப் பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 37.02 மில்லியனைக் கழித்து, கம்பனி கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை ரூபா 88.42 மில்லியன் எனப் பின்னர் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாக விளங்கியது.

(ii) அவ்வாறு கூட்டுத்தாபனத்திற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 88.42 மில்லியனை 05 ஆண்டுகளின்போது 05 தவணைகளில் கொடுப்பனவு செய்து தீர்வு செய்வதற்குக் கம்பனி இணங்கியிருந்தபோதும், மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் அறவிட வேண்டியிருந்த மூலக்கட்டணமாகிய (Down Payment) ரூபா 20 மில்லியன் மற்றும் 2018 யூலை 15 ஆந் திகதி அறவிட வேண்டிய முதல் தவணைப் பணமாகிய ரூபா 20.41 மில்லியன் என மொத்தமாக ரூபா 40.41 மில்லியன் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகளைக் கூட்டுத்தாபனம் மேற்கொள்ளவில்லை.

(iii) குறித்த சுவீகரிப்புக்குரிய உடன்படிக்கைகள் அல்லது சுவீகரிப்பதற்கான ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனத்தின் கெரவலபிட்டிய கழிவுப்பொருள் கூடத்தில் அரசாங்க உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவுப்பொருட்களை அகற்றியமை தொடர்பாக அந்த நிறுவனங்களிலிருந்து கூட்டுத்தாபனம் பெற வேண்டியிருந்தது ரூபா 102,382,458 ஆகும். மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நட்டக் கடனாக ரூபா 72,475,016 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும், அதற்கான காரணத்தைக் கணக்காய்வில் புரிந்து கொள்ள முடியாதிருந்தது. மேலும், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இயந்திர சாதனங்களை வாடகைக்கு வழங்கியமை தொடர்பாக மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறு கூட்டுத்தாபனம் அறவிட வேண்டியிருந்தது ரூபா 730,540 ஆகும். இதற்கு முற்றாகவே நட்டக் கடனுக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) கூட்டுத்தாபனம் 4 மில்லியன் கியூபிக் மீட்டர் கடல் மணலைப் பெறுவதற்கு வெளிநாட்டுக் கம்பனி ஒன்றுடன் 19,975,000 அமெரிக்க டொலர் பெறுமதியான ஒப்பந்தத்திற்கு இணங்கியபோதும், அதன் பொருட்டு இரு சாராரும் முறையான உடன்படிக்கையில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன், புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) மாத்திரம் செய்யப்பட்டிருந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னரே வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணத்தை ஒப்பந்தகாரருக்கு வழங்கலாமெனினும், அதற்கு முரணாக, கூட்டுத்தாபனம் 2018 செப்டெம்பர் 15 ஆந் திகதியளவில் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது ஒப்பந்தகாரருக்கு 994,000 அமெரிக்க டொலர்களை முற்பணமாக கொடுப்பனவு செய்திருந்தது. மேலும், செயற்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் ஒப்பந்தகாரர் 2018 சனவரி 20 முதல் 2018 ஒக்டோபர் 15 வரை 1 மில்லியன் கியூபிக் மீட்டர் கடல் மணலை வழங்க வேண்டியபோதும், 2018 செப்டெம்பர் 15 ஆந் திகதியளவில் 525,114 கியூபிக் மீட்டர் மணலையே வழங்கியிருந்ததுடன், உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட அளவின் ஏறக்குறைய 52 சதவீதமாகவும் அது அமைந்திருந்தது.

### 4.5 குறைபாடுகளாகத் தோற்றுபவை

கூட்டுத்தாபனம் ஹோட்டல் கம்பனி ஒன்றிடமிருந்து பெற்ற சேவைகளுக்கு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,568,248 கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது. இது நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காததுடன், பெறப்பட்ட சேவைகளது விபரமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 4.6 நிதியப் பயன்பாடு

மீளாய்வாண்டின் இறுதியளவில் ராகம களு ஓயா செயற்திட்டம் மற்றும் அம்பாந்தோட்டை மயுரபுர செயற்திட்டம் என்பவற்றிற்கு பெற்ற நிதியேற்பாடு ரூபா 56.50 மில்லியனாகும். இது குறித்த செயற்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படவில்லை.

### 4.7 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தியத உயன சுற்றாடலுக்கு 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2.58 மில்லியன் பெறுமதியான 100 மரக்கறித் தட்டுக்கள் பயன்படுத்தப்படாது கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதலாக பிரதான களஞ்சிய வளாகத்தில் துருப்பிடித்தவாறிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 50.97 மில்லியன் பெறுமதியான 8074 கேபியன் பெட்டிகள் மற்றும் ரூபா 24.05 மில்லியன் பெறுமதியான 04 படகுகளும் எக்ஸ்கவேட்டர் இயந்திரமும் பாவனையின்றி இருந்தன.

(இ) மீளாய்வாண்டின் இறுதியளவில் கூட்டுத்தாபனத்தின் மெதுவாக நகரும் கையிருப்பின் (Slow Moving Stock) பெறுமதி ரூபா 267.32 மில்லியன் ஆகவிருந்தது. அதில் 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த கையிருப்புகளது பெறுமதி ரூபா 48.49 மில்லியனாகும். இதிலும் 8 வகையான ரூபா 10.30 மில்லியன் பெறுதியான பொருட்களும் உபகரணங்களும் அசைவற்றவாறு (Non moving) மத்திய களஞ்சியத்தில் தேங்கியிருந்தன.

## 4.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான களணியில் உள்ள முதுன் எலவில் உள்ள 05 ஏக்கர், 03 றூட், 9.77 பேர்ச்சர்ஸ் காணி மீளாய்வாண்டின்போது களணிப் பல்கலைக்கழகத்திற்கு ரூபா 415,075,892 க்கு விற்பனை செய்யப்பட்டபோதும், தற்போதைய மதிப்பீட்டுப் பெறுமதியில் அல்லாது 2012 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியிலேயே விற்பனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.9 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் மும்மொழிப் பாடசாலை செயற்திட்டத்திற்கு உலர் மண்ணைப் பெறும்போது கூட்டுத்தாபனம் ஒரு கியூப் மண்ணை ரூபா 1,675 வீதப்படியான குறைந்த விலையில் பெறுவதற்கு இணங்கியபோதும், ஒரு கியூப் மண்ணை ரூபா 2,075 வீதம் பெற்றமையால் ரூபா 04 மில்லியன் இழப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) கிரி மண்டல மாவத்தையில் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கட்டிடம் கூட்டுத்தாபனத்தால் இலங்கை காணி மீட்பு அபிவிருத்தி கம்பனிக்கு 2003 ஆம் ஆண்டு தொடக்கம் குத்தகைக்கு வழங்கப்படுகையில் விலை மதிப்பீட்டுத் திணைக்களம் வழங்கிய மதிப்பிடப்பட்ட குத்தகை வாடகைக்குக் குறைவாக அறவீடு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட திரண்ட நட்டம் ரூபா 2.5 மில்லியன் ஆகும். அவ்வாறே, இம்மாதாந்தக் குத்தகை வாடகையை 2005 ஆம் ஆண்டின் பின்னர் மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகளையும் கூட்டுத்தாபனம் மேற்கொள்ளவில்லை.

## 4.10 முறையாக சுவீகரிக்காத காணிகளில் / சொத்துக்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனம் முதுராஜவெல குணசேகர மாவத்தை அபிவிருத்திச் செயற்திட்டத்திற்குக் காணியைச் சுவீகரிப்பதற்கு முன்னர் 1997 முதல் 2000 வரை அச் செயற்திட்டத்தின் பொருட்டு 17,439,977 செலவிடப்பட்டிருந்தபோதும், குறித்த காணியை செயற்திட்ட நடவடிக்கைகளுக்குச் சுவீகரித்த முடியாது போனமையால் அச்செயற்திட்டம் இடை நிறுத்தப்பட்டிருந்தது. மேலும், செலவாகிய தொகை மீளாய்வாண்டின் நட்டமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மூல சாத்தியக்கூறு ஆய்வு இல்லாது கூட்டுத்தாபனம் மாதின்னாகொடை இடைப் பிரதேச வீதியை நிர்மாணிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 111 மில்லியனைச் செலவழித்திருந்தபோதும், செயற்திட்டத்தை ஆரம்பித்ததன் பின்னர் காணியைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் காரணமாக ஏற்பட்ட பிரச்சினைக்குரிய நிலைமையால் இந்நிர்மாண வேலை இடை நடுவே நிறுத்தப்பட்டிருந்தது. ஆகவே, இச்செயற்திட்டத்திற்கான செலவினம் பயனற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது.

**4.11 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபன வளங்கள்**

2003 யூன் 02 ஆந்திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவற்றிற்கு முரணாக மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபன பதவியணியினரில் 04 பேர் ஏனைய அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், கூட்டுத்தாபனம் சம்பளமும் படியுமாக அவர்களுக்கு ரூபா 1.82 மில்லியனை வழங்கியுமிருந்தது. அவ்வாறே, கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வாகனம் ஒன்று வரிசை அமைச்சின் அமைச்சரது ஒருங்கிணைப்புச் செயலாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பராமரிப்புச் செலவினமாக மீளாய்வாண்டின்போது ரூபா 697,631 செலவிடப்பட்டிருந்தபோதும், அத்தொகை மீள் நிரப்பப்படவில்லை.

**4.12 பதவியணி நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 1873 ஆகும். அத்தினத்தில் உள்ளவாறான பதவியணியினரின் எண்ணிக்கை 1,448 ஆகியமையால் கூட்டுத்தாபனப் பதவியணியில் 462 வெற்றிடங்களும் 37 மிகைகளும் நிலவின. அவ்வெற்றிடங்களுள் கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று தரத்திலான பொது முகாமையாளர் பதவி வெற்றிடமாக இருந்ததுடன், 2018 செப்டெம்பர் மாதமளவிலும் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கு கூட்டுத்தாபனம் றடவடிக்கை எடுத்திராததுடன், இந்நிலைமையானது கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியான காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனி மற்றும் எல்ஆர்டீசீ சேவை கம்பனியிலிருந்து சம்பளத்தை மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் கூட்டுத்தாபனம் ஆட்சேர்த்த பதவியணியினரது எண்ணிக்கை முறையே 109 மற்றும் 800 என்பனவாகும். இப்பதவியணியினருக்குக் கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சம்பளமாக வழங்கியிருந்த தொகை ரூபா 173.64 மில்லியனாகும். எவ்வாறாயினும், வருடாந்த பாதீட்டில் இதற்கான நிதியேற்பாடு இருக்கவில்லை. இந்த ஊழியர்களும் உள்ளடங்கால பதவியணியை மறுசீரமைப்பதற்குக் கூட்டுத்தாபனம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. மேலும், குறிப்பிடப்பட்ட பதவியணிக்குப் புறம்பாக மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் தனது வேலைத்தளங்களின் நடவடிக்கைகளுக்கு நாளாந்தம் ரூபா 750 வீதம் படியை வழங்கியவாறு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினது 137 ஊழியர்களது சேவையையும் பெற்றிருந்தது.

**4.13 வாகனப் பாவணை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 61 வாகனங்கள் போக்குவரத்துப் பிரிவிற்குப் பொறுப்பான உத்தியோகத்தரது மேற்பார்வை இல்லாது ஒவ்வொரு பிரிவினதும் பாவனைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், சில வாகனங்கள் போதியளவு பயன்படுத்தப்பட்டிருக்கவுமில்லை. அவ்வாறிருக்க, கூட்டுத்தாபனத்தின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு 36 வாடகை வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு மீளாய்வாண்டின்போது அதன் பொருட்டு ரூபா 10.76 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் மேற்கொண்ட சொத்துக் கணிப்பின் பிரகாரம் சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட டிறக்டர் டிறெயிலர் ஒன்று நேரடிப் பரீசீலனையின்போது காணப்படாததுடன், சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்படாத நீர் பவுசர் ஒன்று நேரடிப் பரீசிலனையின்போது இனங்காணப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனம் இது தொடர்பாக முறையான ஆய்வுகளை 2018 ஆகஸ்ட் மாதமளவிலும் மேற்கொள்ளவில்லை.

(இ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 09 டிப்பர் வண்டிகளும் 08 கெப் வண்டிகளும் கூட்டுத்தாபனத்தின் சேவைப் பிரிவால் பழுதுபார்க்கப்படுவதற்காக முறையே ரூபா 4,525,312 மற்றும் ரூபா 2,946,604 என செலவிடப்பட்டிருந்தது. ஆண்டின் சகல மாதங்களிலும் அந்த வாகனங்கள் மீண்டும் மீண்டும் பழுதுபார்க்கப்பட்டிருந்தமை காரணமாக சேவைப் பிரிவின் வாகனப் பழுதுபார்த்தலின் தரம் கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாக விளங்கியது.

### 4.14 வர்த்தகச் சந்தைப் பங்கு

மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் வர்த்தகச் சந்தையில் நிலவிய ரூபா 610 மில்லியன் பெறுமதியான 03 நிர்மாண வேலை ஒப்பந்தங்களுக்கு மாத்திரமே போட்டியுடனான கேள்விகளைச் சமர்ப்பித்திருந்தது. அதில் ரூபா 31 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தத்தை மாத்திரமே அது பெற்றிருந்தது. இந்நிலைமையின் பிரகாரம், கூட்டுத்தாபனம் திறந்த வர்த்தகச் சந்தையில் நிலவும் போட்டியுடனான ஒப்பந்தங்களை பெறுவதற்குப் போதியளவு கவனம் செலுத்தியிராததுடன், பொதுத் திறைசேரியின் நிதியேற்பாடுடன் பெறப்படும் ஒப்பந்த நடவடிக்கைகளை மாத்திரமே நிறைவேற்றுவதன் மூலம் கூட்டுத்தாபனம் பெறக்கூடியதாகவிருந்த வர்த்தகச் சந்தைப் பங்கை இழந்திருந்தது.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சினது செயலாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டினது ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் செயற்பட வேண்டியதுடன், மீளாய்வாண்டின் பொருட்டு இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகளை எவ்வாறு செயற்படுத்துவது என்பதை அறிந்திருக்கவில்லை. அதன் காரணமாக நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடையும் விதம், இலக்கை அளவிடுவதற்கான சுட்டிகள் என்பவற்றை இனங்கண்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் வரைவு நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் 4 ½ மாத கால தாமதத்தின் பின்னர் 2018 யூலை 17 ஆந் திகதியன்றே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6.2 உள்ளகக் கணக்காய்வு

முகாமைத்துவம் சீராக்க வேண்டிய துறைகள் சம்பந்தமான வழிகாட்டலுக்கு முக்கிய நடவடிக்கையாக உள்ளகக் கணக்காய்வை பயன்படுத்தப்பட வேண்டுமாயினும், பாரிய அளவிலான நிர்மாண ஒப்பந்தகாரராகவும் கூட்டுத்தாபனத்தின் வியாபாரப் பணியாகிய காணி விற்பனை மற்றும் குத்தகைக்கு வழங்குதல், மணல் விற்பனை மற்றும் வீடமைப்புச் செயற்திட்டங்களை உருவாக்கி விற்பனை செய்தல் போன்ற சந்தர்ப்பங்கள் விரிவடைவதுடன் சிறந்த பெறுபேற்றை அடைவதற்காக உள்ளகக் கணக்காய்வு பதவியணியை சக்திமிக்கதாக்குதல் தொடர்பாக கூட்டுத்தாபனம் போதிய கவனம் செலுத்தவில்லை. மேலும், உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தினுள் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கான நிகழ்ச்சித்திட்டம் உள்ளடங்கியிருக்கவில்லை.

## 6.3 பொருட் கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

### 6.3.1 பொருட் கொள்வனவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கான (2017 - 2020) பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் உள்ளடங்குமாறு பிரதான பொருட் கொள்வனவுத் திட்டம் ஒன்றை கூட்டுத்தாபனம் தயாரிக்கவில்லை. அவ்வாறே, மீளாய்வாண்டிற்கான விரிவான பொருட் கொள்வனவுத் திட்டத்தையும் தயாரித்திருக்கவில்லை. தயாரிக்கப்பட்ட பொருட் கொள்வனவுத் திட்டத்தினூடாக பொருட் கொள்வனவுக்குரிய பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் (Procurement Activities), அந்நடவடிக்கைகளுக்கு மதிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் அப்பெறுமதி தொடர்பாக நியமிக்கப்பட வேண்டிய பொருட் கொள்வனவுக் குழு எது போன்ற மற்றும் பொருட் கொள்வனவுடன் தொடர்புடைய தவறற்ற காலவரையும் நிரூபணமாகவில்லை. மேலும், அரசாங்க மானியத்திற்காக மாத்திரமே அத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், கூட்டுத்தாபனத்தின் செயற்திட்டங்கள் மற்றும் சேவை வழங்கும் செயற்திட்டங்களுக்குரிய பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் என்பன அதில் உள்ளடக்கப்படவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின்போது ரூபா 64.72 மில்லியன் பெறுமதியான கேபியன் பெட்டிகளைக் கொள்வனவு செய்கையில் பெறப்பட்ட அதி குறைந்த கேள்வி மற்றும் இரண்டாவது கேள்வி என்பவற்றுக்கிடையே ரூபா 172,250 விலை வித்தியாசம் இருந்தபோதும், கேள்விகளைச் சமர்ப்பித்தவர்கள் அப்பொருட்களுக்கென வழங்கிய உத்தரவாத காலம் முறையே 01 ஆண்டு, 10 ஆண்டுகள் என்பனவாகும். எனினும், கூட்டுத்தாபனம் அவர்கள் வழங்கிய உத்தரவாதக் காலத்தைக் கருத்திற் கொள்ளாது அதி குறைந்த விலையைச் சமர்ப்பித்த கம்பனிக்கு வழங்கலை ஒப்படைத்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின்போது கதுறுவெல வேலைத்தளத்திற்கு கூட்டுத்தாபனம் ரூபா 34.40 மில்லியன் பெறுமதியான கட்டிடப் பொருட்களைக் கொள்வனவு செய்கையில் அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14.1 மற்றும் மேலதிகம் 33 என்பவற்றின் பிரகாரம் திறந்த போட்டியுடனான விலை கோரலின் கீழ் கூறு விலைகளைக் கோராமல் 2 பிரதேச வழங்குநர்களிடமிருந்து மாத்திரமே (Mobile Tendering) கூறு விலைகளைப் பெற்றிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் தனது வேலைத்தளத்திற்குத் தேவையான உலர்ந்த மண்ணின் அளவை செயற்திட்ட ஆரம்பத்திலேயே சரிவர இனங்காணாது அவசர தேவைக்கான சந்தர்ப்பமாக ஆண்டு முழுவதும் பல்வேறு அளவுகளிலும் பல்வேறு விலைகளிலும் 26 ஒப்பந்தங்களின் மூலம் ரூபா 415.81 மில்லியன்

செலவில் உலர்ந்த மண்ணைப் பெற்றிருந்தது. இந்நிலைமையானது ஒப்பந்த முகாமைத்துவத்தில் உள்ள நலிவாக அவதானிக்கப்பட்டதுடன் பொருட் கொள்வனவு நடைமுறைகளின் மூலம் அரசாங்கம் எதிர்பார்க்கும் சிக்கனம், காலம் மற்றும் உயர் தரம் என்பவற்றை உள்ளடக்கிய வழங்குனர் ஒருவரைத் தெரிவு செய்யும் அவகாசம் இதன் மூலம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8 மற்றும் 5.4.10 ஆம் பிரிவுகளின் பிரகாரம ஒப்பந்தச் செயலாற்றல் தோல்வியடையுமிடத்து மற்றும் ஒப்பந்தகாரர் ஒப்பந்த உடன்படிக்கையை மீறுமிடத்து கூட்டுத்தாபனத்துக்கு ஏற்படும் இழப்பைக் குறைத்துக் கொள்வதற்கு செயலாற்றல் பிணை முறி (Performance Bond) பெறப்பட வேண்டுமாயினும், உலர்ந்த மண் வழங்குதலின்போது அவ்வாறான பிணை முறியைப் பெறுவதற்குக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) கூட்டுத்தாபனம் டிப்பர் வண்டிகளை வாடகைக்குப் பெறும்போது மீளாய்வாண்டிற்கென கூறு விலைகளைக் கோராது முன்னைய ஆண்டிற்கெனப் பெறப்பட்ட கூறு விலையின் அடிப்படையில் டிப்பர் வண்டிகளை வாடகைக்குப் பெற்றிருந்தது. இந்நிலைமையானது அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2.1(இ) பிரிவுக்கு முரணானதாகும்.

(ஊ) கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டில் வாகனங்களை வாடகைக்குப் பெறும்போது ஆண்டின் ஆரம்பத்தில் கூறு விலைகளைக் கோரி வாடகை வாகன வழங்குநர்கள் மற்றும் வாடகை வாகனங்களுக்கான கட்டணத்தை தீர்மானித்திருந்ததுடன், வாடகை உடன்படிக்கைகளைப் புதுப்பிக்கும்போது மீண்டும் போட்டியுடனான கூறு விலைகளைக் கோராது முன்னர் தீர்மானித்த வாடகைக்கே வாகனங்களைப் பெற்று அதன் பொருட்டு மீளாய்வாண்டில் செலவழித்திருந்த தொகை ரூபா 10.76 மில்லியனாகும்.

(எ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவுக்கு முரணாக மீளாய்வாண்டின்போது எழுத்து மூல உடன்படிக்கைகள் இல்லாது கூட்டுத்தாபனம் ரூபா 37.97 மில்லியன் பெறுமதியான 04 ஒப்பந்தங்களை ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கியிருந்தது.

(ஏ) கூட்டுத்தாபனத்தின் சகல பொருட் கொள்வனவுகள் சம்பந்தமாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிறிதாக ஒரு வழங்கற் பிரிவு நிறுவப்பட்டிருக்கையில் அப்பிரிவு அறியாதிருக்க மீளாய்வாண்டின்போது வேரஸ் கங்கை மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் முன்னேற்றச் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 124.59 மில்லியன் பெறுமதியான 08 பொருட் கொள்வனவுகள் நடைபெற்றிருந்தன.

(ஐ) மீளாய்வாண்டின்போது நிர்மாண வேலைகளை வெற்றிகரமாக முடித்திராத 05 உப ஒப்பந்தகாரர்களது செயலாற்றல் பிணை முறியில் ரூபா 1,995,075 கூட்டுத்தாபனத்தால் மீண்டும் அறவிடப்பட்டிருந்தபோதும், பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.11.6(அ) பிரிவின் பிரகாரம் அவ்வொப்பந்தகாரர்கள் செயலாற்றல் அற்ற பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை.

(ஒ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8(அ) பிரிவின் பிரகாரம், ஒப்பந்தம் வழங்கப்படுகையில் ஒப்பந்தகாரரிடமிருந்து ஒப்பந்தப் பெறுமதியில் 5 சதவீதத்துக்குக் குறையாத தொகை செயலாற்றல் பிணை முறியாகப் பெறப்பட வேண்டுமாயினும், கூட்டுத்தாபனம் அவ்வாறு செயற்படாது ஒப்பந்தகாரர்களுக்குக் கொடுப்பனவை மேற்கொள்கையில் செயலாற்றல் பிணைமுறிகளின் பொருட்டு விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட பெறுமதியின் ஒரு பகுதியை அறவிட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அவ்வாறாக அறவிடப்பட்டிருந்த தொகை ரூபா 39,265,196 ஆகும். மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அப்பெறுமதியில் 1 முதல் 5 ஆண்டுகளுக்கிடையில் தீர்வு செய்யப்படாதிருந்த மீதி ரூபா 13,491,070 ஆகும். 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 487,313 ஆகும்.

### 6.3.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

--------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் தியத உயன நிர்மாண வேலை நடவடிக்கைகள் முடிவடைய வேண்டிய நாள் 3 ஆண்டுகளைக் கடந்திருந்தபோதும், அந்நடவடிக்கைகள் முடிவடைந்திராததுடன் செயற்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் மதிப்பிடப்பட்ட பெறுமதியின் 43 சதவீதமாகிய ரூபா 52.97 மில்லியன் ஆகவுமிருந்தது.

(ஆ) கொலன்னாவ மற்றும் சாலமுல்ல பிரதேசங்களில் 792 வீடுகளை நிர்மாணிக்கும் (பீ மற்றும் சீ கட்டிடங்கள்) ஒப்பந்தத்திற்கு கூட்டுத்தாபனம் செலவழித்த தொகை ரூபா 653.02 மில்லியனாகியபோதும், நகர அபிவிருத்தி அதிகாரசபை சான்றுறுதிப்படுத்திய பெறுமதி ரூபா 355.69 மில்லியனாகையால் எஞ்சிய நடைபெற்ற வேலைகளது பெறுமதியாகிய ரூபா 297.33 மில்லியன் 03 ஆண்டுகள் கடந்தும் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின்போது வேலை முடிவடைய வேண்டிய ரூபா 340 மில்லியன் பெறுமதியான 04 ஒப்பந்தங்களின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிதிசார் முன்னேற்றம் 1 முதல் 24 சதவீதமாக இருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனம் முறையான ஆரம்ப ஆய்வுகளின்றியும் திட்டமின்றியும் பொல்கொட வாவியின் கரையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தை அமுல்படுத்தியமையால் அவ்வாவியின் கரை உடைந்து வீழ்ந்து செயற்திட்டம் இடை நடுவே நிறுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் வாவியின் கரையை மீண்டும் மறுசீரமைப்பதற்கு கூட்டுத்தாபனம் செலவிட்ட தொகை ரூபா 9,001,423 ஆகும்.

(உ) 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய 13/1144/503/087 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் வேரஸ் கங்கை மழை நீர் வடிகால் மற்றும் முன்னேற்றச் செயற்திட்டம் அமுலாக்கப்படுவதற்குக் கடனாக ரூபா 14,227 மில்லியன் பொதுத் திறைசேரியின் பிணையுடன் தேசிய சேமிப்பு வங்கியினூடாக கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, கூட்டுத்தாபனம் 2014 யூலை 14 ஆந் திகதியன்று 14 ½ ஆண்டுகளில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான உடன்படிக்கையை தேசிய சேமிப்பு வங்கியுடன் செய்து கொண்டது. நுகேகொடை, ரத்தனபிட்டிய, பொரலெஸ்கமுவ, பிலியந்தல, வேரஹெர ஆகிய பிரதேசங்களில் மழைக் காலத்தில் ஏற்படும் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்துதல், தற்போதுள்ள வாவிகளது நீரோடும் பாதையை விரிவுபடுத்துதல், வாவிகளின் கரைகளைப் பாதுகாத்தல், வெள்ளப் பெருக்குப் பிரதேசங்களைப் பாதுகாத்து குளங்களை அமைத்தல், புதிய மதகுகளையும், பாலங்களையும் அமைத்தல் என்பன செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். அவ்வாறே, 2017 டிசெம்பர் 07 ஆந் திகதிய அமப/17/2561/724/112 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி ரூபா 14,227 மில்லியனுக்கு இணக்கஞ் செய்யப்பட்ட கடன் உடன்படிக்கையை இரத்துச் செய்து அத்தினத்தில் உள்ளவாறு பெறப்பட்ட ரூபா 2,550 மில்லியன் கடனின் பொருட்டு புதிய கடன் உடன்படிக்கையில் ஈடுபடவும் குறித்த கடன் தவணைப் பணத்தையும் வட்டியையும் செலுத்துவதற்குத் தேவையான செலவினத்தை வருடாந்த பாதீட்டின் மூலம் நிதியேற்பாடு செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டது.

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஒக்டோபர் 04 ஆந் திகதி ஆரம்பமாகி 05 ஆண்டுகளில் அதாவது, 2018 ஒக்டோபர் 24 ஆந் திகதி செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு

எதிர்பார்த்தபோதும், மீளாய்வாண்டின் இறுதியளவில் செயற்திட்டம் 04 ஆண்டுகளைக் கடந்து இருந்தமையால் செயற்திட்டத்தை நிறைவு செய்ய வேண்டிய காலத்துடன் ஒப்பிடுகையில் 80 சதவீத முன்னேற்றம் அறிவிக்கப்பட வேண்டுமாயினும், அத்தினத்தில் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் ஏறக்குறைய 43 சதவீதமாகவிருந்தமை கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட ஆவணங்களின் மூலம் உறுதியாகியது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் அசாதாரண காலதாமதத்தைத் தவிர்த்தவாறு குறித்த காலத்தில் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய நடவடிக்கைகளை முகாமைத்துவம் அறிமுகம் செய்யவில்லை. மேலும், மீளாய்வாண்டில் செயற்திட்டத்தினது மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 11,050 மில்லியன் என அதாவது, மதிப்பிடப்பட்ட கிரயத்தை 23 சதவீதத்தால் குறைத்ததன் மூலம் செயற்திட்டம் நிறைவேற்றுவதற்கு எண்ணிய பரப்பெல்லையை அடைய முடியவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செயற்திட்டம் 03 மாதங்கள், 06 மாதங்கள் போன்ற குறுகிய காலத்தின்போது நிறைவேற்ற வேண்டிய 60 ஒப்பந்த வேலைகளை பெக்கேஜ் அடிப்படையில் உப ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கியிருந்ததுடன், அவர்களுக்கு மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணமாக ரூபா 162,474,128 (Mobilization) ஐ வழங்கியுமிருந்தது. இதில் ஓராண்டு கால தாமதத்திற்கு மேற்பட்ட மீதியையும் உள்ளடக்கிய தீர்வு செய்யப்படாத மீதி ரூபா 135,765,060 ஆகும். அதற்கமைய, செயற்திட்டம் கடன் மூலம் பெற்றுக்கொண்ட பணத்தில் முற்பணமாக ஒப்பந்தகாரருக்கு வழங்கிய தொகை அசாதாரண காலப்பகுதியின்போது ஒப்பந்தகாரர்களிடம் வசம் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) 2017 டிசெம்பர் 07 ஆந் திகதிய அமப/17/2561/724/112 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் வேரஸ் கங்கை செயற்திட்டத்திற்கென மீளாய்வாண்டின் இறுதியளவில் தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து பெற்றிருந்த கடன் ரூபா 2,550 மில்லியன் ஆகும். இதன் பொருட்டு வங்கியுடன் புதிய உடன்படிக்கையில் ஈடுபட வேண்டுமாயினும், 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் அவ்வாறான புதிய உடன்படிக்கையில் ஈடுபடவில்லை. அவ்வாறே, குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் செயற்திட்டத்திற்குத் தேவைப்படும் பணத்தை வருடாந்த வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் பெறவிருப்பதால் செயற்திட்டம் முடிவடைவதற்கு ஏறக்குறைய 10 ஆண்டுகளாகும். எனினும், மீளாய்வு செய்யப்பட்ட அக் காலவரையறைக்கேற்றவாறு கூட்டிணைந்த திட்டத்தையோ அல்லது செயல் நடவடிக்கைத் திட்டத்தையோ தயாரிப்பதற்கான நடவடிக்கைகளைக் கூட்டுத்தாபனம் மேற்கொள்ளவில்லை.

மேலும், செயற்திட்டத்தின் கீழ் வேலையை ஆரம்பித்த வலயத்தில் அமைந்துள்ள வீதிகளின் அருகே வசிப்பவர்கள் செயற்திட்ட நடவடிக்கைகள் காரணமாகத் தற்காலிகமாக அப்புறப்படுத்தப்பட்டிருந்தபோதும், இக்காரணங்களின் பொருட்டு எதிர்பார்த்த காலத்துள் செயற்திட்டம் அமுலாகாதுவிடின் அநேக சமூகப் பிரச்சினைகளை கூட்டுத்தாபனம் எதிர்கொள்ள நேரிடும் எனவும் அவதானிக்கப்பட்டது.

(iv) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வேலையை நிறைவேற்ற வேண்டிய செயற்திட்டதின் மூலம் முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட ரூபா 108.61 மில்லியன் பெறுமதியான 04 உப ஒப்பந்தங்களது வேலைகள் மீளாய்வாண்டு இறுதியளவில் கைவிடப்பட்டிருந்ததுடன், அதன் பொருட்டு கூட்டுத்தாபனம் செலவழித்திருந்த தொகை ரூபா 35.56 மில்லியனாகும்.

(v) மீளாய்வாண்டின் இறுதியளவில் செயற்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 416.66 மில்லியன் பெறுமதியான 14 உப ஒப்பந்த நிர்மாண வேலைகள் முடிவடைய வேண்டுமாயினும், அவற்றின் பௌதீக செயல் முன்னேற்றம் 5 முதல் 50 சதவீதம் வரையிலான குறைந்த மட்டத்திலிலேயே இருந்ததுடன், அவற்றிலும் 10 உப ஒப்பந்தங்களது தாமத காலம் ஓராண்டைக் கடந்துமிருந்தது. அவ்வாறிருந்தபோதும், செயற்திட்டம் அப்வொப்பந்தங்களுக்கான கால நீடிப்பை அல்லது உப ஒப்பந்தகாரர்களிடமிருந்து தாமதக் கட்டணம் (Liquidated Damages) அறவிட்டோ இருக்கவில்லை. மேலும், உப ஒப்பந்தகாரர்கள் சமர்ப்பித்திருந்த செயலாற்றல் பிணை முறிகளுக்குக் கால நீடிப்பைப் பெறுவதற்கும் செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vi) மீளாய்வாண்டின்போது வேலை முடிவடைய வேண்டியதும் செயற்திட்டத்தால் வழங்கப்பட்டதுமான ரூபா 126.2 மில்லியன் பெறுமதியான 4 உப ஒப்பந்தங்களது எந்த வேலையும் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் நடைபெற்றிராததுடன், அவ்வொப்பந்தங்களின் பொருட்டு வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணமாக (Mobilization Advance) செயற்திட்டத்தால் ரூபா 24 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது.

(vii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 406.53 மில்லியன் பெறுமதியான 16 உப ஒப்பந்தங்களது நேரடிச் செயல் முன்னேற்றம் 100 சதவீதம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், அவ்வொப்பந்தங்களது நிதிசார் முன்னேற்றத்தை ஒப்பந்தப் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் அது 20 முதல் 80 சதவீதமாகவே இருந்தது.

(viii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செயற்திட்டம் காணிகளைச் சுவீகரிக்கும் பணியை ஆரம்பித்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த போதும், காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எந்தவொரு காணியையும் அரசாங்கம் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இயலாது போனதுடன், காணி அதிகாரச் சட்டத்தின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணியின் அளவு 267.67 ஹெக்டேயார் ஆகும். இதன் நிமித்தம் வீடுகளை இழந்த சில குடும்பங்களுக்கு தொடர்ச்சியாக வீட்டு வாடகையைக் கூட்டுத்தாபனம் வழங்க வேண்டியிருந்தது. மேலும், இந்நிலைமையின் கீழ் மீளாய்வாண்டின்போது செயற்திட்டம் ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டிருந்த ரூபா 197.69 மில்லியன் பெறுமதியுடைய 06 ஒப்பந்தங்களது வேலைகளைத் திட்டமிட்டவாறு ஆரம்பிக்க முடியவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வேலை நிறைவடைந்த மற்றும் நடைபெற்றவாறிருந்த 29 செயற்திட்டங்களுடன் தொடர்புடைய சேவை வழங்குநர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட இன்வொய்சுகளது பெறுமதி ரூபா 2,277,562,146 ஆகும். சேவை வழங்குநர்கள் சான்றுறுதிப்படுத்திய இன்வொய்சுகளது பெறுமதி ரூபா 1,656,214,858 ஆகும். கூட்டுததாபனம் குறித்த காலவரையறைக்குள் இன்வொய்சுகளைச் சமர்ப்பிக்காமை, ஆரம்பத் திட்டத்தில் மாற்றம், ஒப்பந்தத்தில் நிலவிய குறைபாடுகள் ஆகியவற்றால் இந்நிலைமை ஏற்பட்டது.

(எ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் அமுல்படுத்திய 12 நிர்மாண வேலைச் செயற்திட்டங்களுக்கு நிர்மாணப் பணி மதியுரையாளர்கள் சான்றுறுதிப்படுத்திய முடிவடைந்த வேலைகளது பெறுமதியிலும் கூடுதலாக வேலை வழங்குநர் நிறுவனங்களுக்கு ரூபா 163,381,834 க்கான இன்வொய்சுகளை வழங்கியமைக்கான காரணத்தைக் கணக்காய்வில் புரிந்து கொள்ள முடியாதிருந்தது.

(ஏ) கூட்டுத்தாபனம் போதியளவு பௌதீக மற்றும் மனித வளத்தைக் கொண்டிருந்த போதும், மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனத்தின் நீர் வழங்கல் மற்றும் மீட்புப் பிரிவு மற்றும் நிர்மாணப் பிரிவு என்பன 119 ஒப்பந்தங்களைப் பொறுப்பேற்று அவற்றுள் 84 ஒப்பந்தங்களை, அதாவது, மொத்த ஒப்பந்தங்களது 71 சதவீதத்தையும் உப ஒப்பந்தகாரர்கள் மூலமாக நிறைவேற்றியிருந்தது.

அவ்வாறே, இந்நிலைமையின் அடிப்படையில் கூட்டுத்தாபனம் பெறக்கூடியதாகவிருந்த பெருமளவு ஒப்பந்த இலாபத்தை உப ஒப்பந்தகாரர்கள் பெற்றிருந்தனர்.

(ஐ) பிபிதுன பொலநறுவை மாவட்ட அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் நான்கு எல்லை பிரதேச மருத்துவ மனையை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 63.03 மில்லியன் பெறுமதியான 03 ஒப்பந்தங்களைக் கூட்டுத்தாபனம் பெற்று அவற்றை உப ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கியிருந்ததுடன், கூட்டுத்தாபனம் சேவை வழங்குநர்களுக்கு சமர்ப்பித்த மதிப்பிடப்பட்ட பிரமாணக் குறிப்புக்கும் (BOQ) உப ஒப்பந்தகாரர்கள் சமர்ப்பித்த பிரமாணக் குறிப்புகளுக்குமிடையே 23 முதல் 34 சதவீத விலை வேறுபாடுகள் காணப்பட்டன. கூட்டுத்தாபனம் இவ்வேறுபாடுகளுக்கான ரேட் பகுப்பாய்வை (Rate Analysis) மேற்கொண்டிருக்கவில்லை.

(ஒ) முறையான ஆய்வின்றி பொறியியல் மதிப்பீட்டைக் கூட்டுத்தாபனம் தயாரித்தமையால் ரூபா 306 மில்லியன் பெறுமதியான 05 ஒப்பந்தங்களின் கூறு விலைகளுக்கும் பொறியியல் மதிப்பீட்டிற்குமிடையே 30 முதல் 45 சதவீதம் வரையிலான விலை வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தன. மேலும், ஒப்பந்தகாரர்கள் சமர்ப்பித்த கூறு விலைகள் குறைவடைவதற்குக் காரணமாகிய பிரமாணக் குறிப்பு ரேட்களைப் பகுப்பாய்வு செய்வதற்கான நடவடிக்கைகளையும் கூட்டுத்தாபனம் மேற்கொள்ளவில்லை.

(ஓ) ஆரம்ப சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொள்ளாதும் பொறியியல் திட்டத்தைத் தயாரிக்காதும் கூட்டுத்தாபனம் வெள்ளவத்தைக் கால்வாயின் பாலத்தைப் புனரமைத்தமையால் வெள்ளவத்தை ஸ்ரீ சுகத விஹாரை மற்றும் அதனோடிணைந்த சிறுவர் இல்லம் என்பன தாழ்வடைவதற்குக் காரணமாகியது.

### 6.3.3 தாமதமாகிய செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் இறுதியளவில் வேலை முடிவடைய வேண்டிய ரூபா 1,767.94 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதியுடைய 16 செயற்திட்டங்களின் வேலை நிறைவடையாததுடன், தாமதக் காலம் 06 முதல் 18 மாதங்களாகவும் இருந்தது.

## 6.4 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளவாறான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பிடுகையில் 20 முதல் 850 சதவீதம் வரையிலான குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நிலவியமையால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6.5 ஆண்டறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் முன் வைத்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட வேண்டுமாயினும், 2015, 2016 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளைக் கூட்டுத்தாபனம் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவில் பாராளுமன்றத்தில் முன் வைத்திருக்கவில்லை.

## 6.6 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் விடயங்கள் மீளாய்வாண்டில் இறுதியிலும் தீர்வு செய்யப்படாதிருந்தன.

(அ) பொறுப்பானவர்களிடமிருந்து அங்கீகாரம் பெறப்படாது பதவியணியினருக்குத் தொடர்ச்சியாகத் தொழில்சார் படியை வழங்கியமை.

(ஆ) உத்தியோகத்தர்களது வாகனக் கடனுக்கான வட்டியை தொடர்ந்து மீளளிப்புச் செய்தமை.

(இ) கூட்டுத்தாபனம் ரூபா 30.2 மில்லியன் கிரயத்தில் புனரமைப்புச் செய்த 3.5 ஏக்கர் காணியில் களணி பிரதேச செயலாளரது அனுசரணையுடன் கோவில் ஒன்றை அமைத்த நபர்களுக்கு எதிராக சட்டபூர்வ நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளுமாறு 2012 நவெம்பர் 30 ஆந் திகதிய பொது முயற்சிகளுக்கான குழுவின் பணிப்புரைக்கமைய அமுல்படுத்துவதற்கான நடவடிக்கை எதனையும் கூட்டுத்தாபனம் மேற்கொள்ளாமை.

(ஈ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டிய பங்களிப்புத் தொகையைக் கணிப்பிடுகையில் குறித்த அதிகாரச் சட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட வேண்டிய படிகளையும் ஏனைய ஊதியத்தையும் கணிப்பிடப்பட்டிருக்காமை.

**(உ) வேரஸ் கங்கை மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் முன்னேற்றச் செயற்திட்டம்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட மற்றும் முடிவடைய வேண்டிய காலப்பகுதியில் குறித்த செயற்திட்டம் முடிவடையும் விதத்தைச் சுட்டிக்காட்டும் கால நிர்ணயத்தை உள்ளடக்கிய செயல் நடவடிக்கைத் திட்டம் (Time Frame) மற்றும் குறித்த வீதிகள், பாலங்கள், மதகுகள், பராமரிக்கப்படும் வீதிகள், நீர் தேங்கும் பிரதேசங்கள் என்பவற்றுடன் தொடர்புடையதான உத்தேச வேலைகளுக்கான நிரல் (Work Shedule / Inventory) தயாரிக்கப்படாது செயற்திட்டம் அமுலாக்கப்பட்டமை.

(ii) செயற்திட்டத்தின் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வெள்ளத்தாலான இடர்களை இனங்காணல், அவை எந்தளவிற்குக் குறைவானதாகவும் அதிகமானதாகவும் இருக்கும் என்பது போன்றதும் அதன் மூலம் ஏற்படக் கூடிய அபாய நிலைமைகளை இனங்கண்டு கொண்டிராமை.

(iii) செயற்திட்டம் அமுலாகும்போது இனங்கண்டிருந்த வலயம் (Zone) மற்றும் உப செயற்திட்டங்கள் (Packages) என்பவற்றின் பொருட்டுத் தயாரிக்கப்பட வேண்டிய மாதாந்த மற்றும் வருடாந்த செயல் முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்படாமை.

(iv) செயற்திட்டத்திற்குரிய 1 ஆம் 2 ஆம் 3 ஆம் வலயங்களில் உள்ள கேபியன் அமைப்புகளை (Gabian Structure) தயாரிப்பதற்கு ரூபா 281,461,659 கூடுதலாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதனடிப்படையில் வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணத்தை ஒப்பந்தகாரர்களுக்குக் கூடுதலாக வழங்கியிருந்தமை.

(v) ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கமைய கேபியன் அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கு 4X6 அங்குல (100*150mm) கருங்கற்கள் மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டுமாயினும் 25 சதவீதத்திற்கும் குறைவான நிர்மாண வேலைகளுக்கே அந்த அளவிலான கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமை அது தொடர்பான நேரடிப் பரிசோதனையின் போது புலனாகியது. எஞ்சிய 75 சதவீதத்திற்கும் 12X16 (200 x 400mm) கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இது பிரித்தானிய BS 8002, 1984 இலக்க நியமத்திற்கு முரணானதாகும். இந்நியமங்களுக்கேற்ப கேபியன் பெட்டிகளில் (Gabian Boxes) கற்களைப் பதிக்கும்போது பயன்படுத்தப்படக் கூடிய கற்களின் அதி கூடிய அளவு 200 mm ஆகும். இந்நிலைமையின் கீழ் கேபியன் பெட்டிகளுக்குள் (Gabian Boxes) அவ்வாறான பெரிய கற்களை இடுவதன் மூலம் அவை பாதிப்படைய வாய்ப்புள்ளதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கேற்ப இந்த அமைப்பு நிர்மாணிக்கப்படாமை.

(vi) முதலாம் இலக்க வலயத்தின் 2,889 மீட்டர் நீள கால்வாய்ப் பாதை அபிவிருத்தியுடன் தொடர்புடைய வேலைகளை 34 ஆம் உப செயற்திட்டத்துடன் இணைத்து ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன், அப்பிரிவுகளை 54 மீட்டர், 68 மீட்டர், 100 மீட்டர், 110 மீட்டர் என மிகச் சிறிய பிரிவுகளாக மொத்த ஒப்பந்தத்தையும் பிரிவுபடுத்தியமைக்கான காரணத்தைக் கணக்காய்வில் புரிந்து கொள்ள முடியாதிருந்ததுடன். இந்நிலைமையின் கீழ் 2,889 மீட்டர் நீள கால்வாய்ப் பாதை அபிவிருத்திக்கு மும்மொழிகளிலும் புதினப் பத்திரிகை அறிவித்தல்களை பிரசுரிப்பதற்கு பெருமளவு கிரயம் செலவாகியதுடன் இச் சகல ஒப்பந்தங்களும் சுகாதார நடவடிக்கையாகக் கழிவறைகளை நிர்மாணித்தல், அலுவலகங்களை நிர்மாணித்தல், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை ஏற்பாடு செய்தல் போன்றவற்றிற்கு ரூபா 1 மில்லியனுக்கும் அதிகமான ஆரம்பச் செலவினத்தை (Preliminaries) மதிப்பீடு செய்து அதனைக் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமை.

(vii) செயற்திட்டத்தின் ரத்தனபிட்டிய கட்டு எல பாதையை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின்போது ரத்தனபிட்டிய பழைய கெஸ்பேவ வீதியில் வியாபார நிலையத்தைச் சென்றடையும் பாலமொன்று தகர்க்கப்பட்டு கால்வாய்ப்பாதை தயாரிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் அப்பாலத்தை அமைப்பதற்குச் செயற்திட்டம் திட்டமிருந்ததுடன், அதற்குப் புறம்பாக அகற்றப்பட்ட பாலத்திற்கென வியாபார உரிமையாளருக்கு ரூபா 1.84 மில்லியனை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்தமை.

(viii) செயற்திட்டத்தால் பாதிக்கப்படுவர்களுக்கு ஆறுதல் பணம் வழங்கப்படுகையில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் அவதானிப்புடன் அது மேற்கொள்ளப்பட வேண்டுமென அமைச்சரவை தீர்மானித்திருந்தபோதும், அவ்வாறல்லாது கூட்டுத்தாபனம் ரூபா 31.07 மில்லியனை வழங்கியிருந்தது.

(ix) சொத்துக்களது உரித்தை உறுதி செய்யும் குழுவினது பரிந்துரை பெறப்படாது முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறு 12 குடும்பங்களுக்கு ரூபா 3 மில்லியனை இழப்பீடாக வழங்கியிருந்தமை.

(x) அமைச்சரவைத் தீர்மானமின்றியும் அரசாங்க விலை மதிப்பீட்டாளரின் இழப்பீட்டு அறிக்கை பெறப்படாதும் பாதுகாப்புக் காரணங்களுக்காக அகற்றப்படும் நிர்மாண வேலைகள் மற்றும் அமைப்புகளுக்காகக் கூட்டுத்தாபனம் முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 35.52 மில்லியனை வழங்கியிருந்தமை.

(ஊ) முன்னைய ஆண்டின்போது ஏக்கலயில் உள்ள மடத்தடிச் சந்தி, வாலுகாராம பன்சலைக்கு அண்மித்த ஏறக்குறைய 04 ஏக்கர் காணியை அனுமதியின்றி மண்ணிட்டு நிரப்புவதாகவும் அதன் பொருட்டுத் துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் ஜாஎல பிரதேச செயலாளர் கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்திருந்தபோதும், கூட்டுத்தாபனம் துரித அவதானிப்பை மேற்கொள்ளாது நேரடிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு 10 நாட்களுக்குப் பின்னர் புகாரை விசாரிப்பதற்காக அனுமதியின்றி காணி நிரப்புவதில் ஈடுபட்ட நபரை விசாரணைக்கு அழைத்திருந்தமை மூலம் அக்காலப்பகுதியின்போது மொத்தக் காணியையும் அவர் அனுமதியின்றி நிரப்பியிருந்தமை.

மேலும், புகார் பெறப்பட்டு 02 மாதங்களின் பின்னர் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தில் உள்ள அதிகாரங்களுக்கமைய அனுமதியற்ற நிரப்புதல் சம்பந்தமாக கூட்டுத்தாபனம் வழக்குத் தொடர்ந்திருந்தபோதும், குறித்த காணியை நிரப்பியதன் மூலம் பிரதேசத்தின் மழை நீர் வடிந்தோடுதல் மற்றும் நீரோடும் பாதையில் ஏற்படும் சாதகமற்ற தாக்கல்கள் தொடர்பான விடயங்களை விளக்குவதற்குக் கூட்டுத்தாபனம் தவறியமையால் நீதிமன்றம் வழக்கை நிராகரித்திருந்தது.

(எ) அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்குரிய 3.05 பர்ச்சஸ் காணி 1993 ஆம் ஆண்டின்போது 99 ஆண்டு கால குத்தகையில் நபர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தபோதும், 2005 ஆம் ஆண்டில் அக்குத்தகை உடன்படிக்கைஇரத்துச் செய்யப்பட்டு எஞ்சிய 84 ஆண்டுகளுக்கு இன்னுமொரு நபருக்கு அக்காணியை மீண்டும் மதிப்பீடு செய்யாது ஆரம்ப உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதிக்கு வழங்கியிருந்ததுடன், 2010 ஆம் ஆண்டில் குறித்த காணி மற்றுமொரு நபருக்கு உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆரம்ப உடன்படிக்கையில் உப குத்தகை உடன்படிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஏற்பாடு இல்லாதிருக்கையில், அமைச்சரவைத் தீர்மானத்தின் பேரில் ஏற்பட்ட குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்து பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கமைய புதிய குத்தகை உடன்படிக்கைகளில் ஈடுபவதற்குக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்தமை.

(ஏ) முன்னைய ஆண்டில் கூட்டுத்தாபனம் ரூபா 73.71 மில்லியன் பெறுமதியான Steel sheet file கொள்வனவின்போது அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டியின் 2.7.5 ஆம் பிரிவின் பிரகாரம் வரிசை அமைச்சினது செயலாளரால் அமைக்கப்பட்ட திணைக்களத்தின் பொருட் கொள்வனவுக் குழுவைத் தவிர்த்து வேறொரு குழு பொருட் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமை.

(ஐ) நிதிக்கூற்றுக்களில் நிறுத்தி வைத்த வருமானமாகக் (Deferred Income) காட்டப்பட வேண்டிய வேரஸ் கங்கை செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டதும் பொதுத் திறைசேரியிடமிருந்து அறவிட வேண்டியதுமான ரூபா 3,332.94 மில்லியன் கூட்டுத்தாபனத்தின் வருமானமாகக் காட்டப்பட்டதன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் முன்னைய ஆண்டிற்கான வருமானம் அதேயளவு அதிகரித்துக் கணிப்பிடப்பட்டிருந்தமை.

## 6.7 சமூகப் பொறுப்பை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கையின் 5 மாகாணங்களில் உள்ள பள்ளத்தாக்குடன் கூடிய, வறண்ட, விளைச்சலற்ற அல்லது தரிசு நிலங்களது எல்லைகளைக் கூட்டுத்தாபனம் வர்த்தமானி மூலம் வெளியிட்டிருந்தபோதும், அப்பிரதேசக் காணிகளில் அத்துமீறி மண் நிரப்புதல், அத்துமீறிக் குடியேறுதல் என்பவற்றை இனங்காண்பதற்கான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டிராததுடன், அந்நிலைமையை பரிசீலிப்பதற்கு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கவும் இல்லை. இதன் காரணமாக, எதிர்காலத்தில் பல்வேறு சமூக மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளைக் கூட்டுத்தாபனம் நேரடியாகவே எதிர்கொள்ள வேண்டியேற்படாது என்பதைக் கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

(ஆ) வேரஸ் கங்கை மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாகி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்தபோதும், அதன் செயல் முன்னேற்றம் மிகவும் கீழ் மட்டத்தில் இருந்தமையால் செயற்திட்டத்தால் பாதிப்புக்குள்ளான வீடுகளில் வசிப்போர்கள் தமது வீடுகளைப் பெற முடியாது அநேக ஆண்டுகளாக செயலிழந்திருந்தனர். அவ்வாறே, கால்வாய்ப் பாதையின் எல்லைகளில் சுவீகரிக்கப்பட்டிருந்த காணித் துண்டுகளில் அமைக்கப்பட்டிருந்த சில வீடுகளும் கால்வாய்ப் பாதை அபிவிருத்தி காரணமாக கீழிறங்கும் நிலையை அடைந்திருந்தமையும் மேலும் அவதானிக்கப்பட்டது. முறையான திட்டமின்றியும் ஆய்வின்றியும் காணிகளைச் சுவீகரித்தல், கால்வாய்ப் பாதை அபிவிருத்திக்கு காலங் கடந்த இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் அதிர்வுகள் (vibration) என்பன இந்நிலைமைக்கான காரணங்களாகும். இவ்வாறான இடங்களில் உள்ள கால்வாயப் பாதைகளின் அபிவிருத்தி வேலைகள் இடை நிறுத்தப்பட்டிருந்ததுடன், இப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்குக் கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(இ) பாரிய கொழும்பு கால்வாய்ப் பாதை மற்றும் வடிகாலமைப்பு முறைமை என்பவற்றினது புனரமைப்புச் செயற்திட்டத்தின் கீழ் அரசாங்கம் சுவீகரித்திருந்த, கூட்டுத்தாபனத்தின் மேற்பார்வையிலும் கட்டுப்பாட்டிலும் உள்ள 990 ஏக்கர் காணியில் 62 ஏக்கரில் பல்வேறு நபர்கள் அத்துமீறிக் குடியேறியிருந்தனர். இவற்றுள் சில காணிகள் நகர சபையால் ஒப்படைப்பு உறுதியின் கீழ் பல்வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தால் செயற்திட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் பொருட்டுச் சுவீகரிக்கும் காணிகள், காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிராமை இந்நிலைமை ஏற்படுவதற்கான நேரடிக் காரணமாக அமைந்தது. அவ்வாறே, மீளாய்வாண்டின் இறுதியளவில் இக்காணிகளுள் 79 ஏக்கர் கூட்டுத்தாபனத்தால் திசை திருப்பப்பட்டிருந்ததுடன (Divesting) சில திசை திருப்பங்களின் காரணமாக நீர் சேகரிப்பு பிரதேசங்களில் ஏற்படக் கூடிய பாதிப்பு தொடர்பாக மதிப்பிடுவதற்கு தொழில்நுட்ப ஆய்வை மேற்கொள்ளாதே திசை திருப்பல் நடைபெற்றிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது கூட்டுத்தாபனத் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | | அவதானிப்புகள் |
| --- | --- | --- |
| (அ) கையிருப்புக் கட்டுப்பாடு | (i) | கூட்டுத்தாபனத்தின் சில வேலைத் தளங்களில் களஞ்சியப் பொறுப்பாளர்களும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் பணியாற்றாததுடன், அவ்வேலைத் தளங்களில் கையிருப்புப் பதிவேடுகள் அல்லது பாதுகாப்புப் பிரிவால் பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் என்பன பேணப்படவுமில்லை. |
| | (ii) | கூட்டுத்தாபன களஞ்சியங்களில் பொருட் பெறுவனவு மற்றும் வழங்கல் என்பன கையிருப்புப் பதிவேட்டில் குறிப்பிடப்படாமையால் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் கையிருப்பு மீதியை இனங்காண்பது முடியாது போனதுடன் உப களஞ்சியங்களில் உள்ள கையிருப்பு மீதிகள் தொடர்பாக மாதாந்த அறிக்கைகள் தலைமைக் களஞ்சியத்திற்கு வழங்கப்படாமை, அவ்வாறே பிரதான களஞ்சியக் கையிருப்பு மீதி தொடர்பான மாதாந்த அறிக்கை தலைமை அலுவலகத்திற்கு வழங்கப்படாமை.<br><br>இந்நிலைமையின் அடிப்படையில் வினைத்திறனுடன் கூடிய கையிருப்பு முகாமைத்துவத்தைக் கூட்டுத்தாபனம் மேற்கொள்ள முடியாதிருந்தமை. |
| (ஆ) ஒப்பந்த நிர்வாகம் | (i) | திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் அமுலாக்கப்படாமை, ஒப்பந்தங்களது செயல் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் நிலவியமை, சில நிர்மாணப் பணிகள் நியமங்களுக்கேற்ப நடைபெறாமை. |
| | (ii) | கூட்டுத்தாபனம் பொறுப்பேற்கும் பல ஒப்பந்தங்கள் உப ஒப்பந்தகாரர்கள் மூலம் நிறைவேற்றப்படுதலும் அவர்களது கூறு விலைகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் கூறு விலைகளுக்குமிடையே பெருமளவு வேறுபாடு நிலவியமையும் |
| | (iii) | ஒப்பந்தகாரர்களுக்கென கூட்டுத்தாபனம் தயாரிக்கும் மதிப்பீடு மற்றும் அந்த ஒப்பந்தங்களது உள்ளவாறான கிரயங்கள் என்பவற்றுக்கிடையே பெருமளவு வேறுபாடு நிலவியமை. |
| | (iv) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஒப்பந்தங்கள் வழங்கப்படாமை மற்றும் ஒப்பந்தங்களுக்கான பிணை முறிகள் (Bond) என்பவற்றை ஒப்பந்தகாரர்களிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |

| | | |
|---|---|---|
| (இ) பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் | (i) | போட்டியேற்படும் விதத்தில் கூறு விலைகளைக் கோராது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட கூறு விலைகளின் அடிப்படையில் பொருட் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |
| | (ii) | கூட்டுத்தாபனத்தின் வழங்கற் பிரிவு அறியாதவாறு கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பிரிவுகளும் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபட்டமை. |
| | (iii) | தற்போதைய காணிப் பெறுமதியைக் கணிப்பிடாது சில காணிகள் விற்பனை செய்யப்பட்டமையும் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் வழங்கப்பட்டமையும், |
| | (iv) | பொருட்கள் களஞ்சியத்தை வந்தடைவதற்கு முன்னர் சில வழங்குநர்களுக்கான மொத்தத் தொகையும் விடுவிக்கப்பட்டிருந்தமை. |
| (ஈ) நிதி முகாமைத்துவம் | (i) | வழங்கப்படும் முற்பணத்திற்குரிய வேலை முடிவற்றவுடனேயே அதனைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | (ii) | கடன் உடன்படிக்கைப் பிரகாரம் கடனுக்கான தவணைப் பணமும் வட்டியும் காலவரைப்படி அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை |
| | (iii) | கடனைப் பெற்றதற்கான நோக்கத்திலிருந்து விலகியவாறு பெற்ற கடனை முதலீடு செய்திருந்தமை. |
| | (iv) | வரவு செலவுத் திட்டத்தின் மூலமும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலமும் அங்கீகரிக்கப்படாத நிகழ்ச்சித் திட்டங்களுக்கு செலவு மேற்கொள்ளப்பட்டமை. |
| | (v) | உடன்படிக்கைப் பிரகாரம் குத்தகை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | (vi) | பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் பெறப்பட்ட அரச மானியத்தை நோக்கத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியமை. |
| | (vii) | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதில் கால தாமதம் நிலவியமை. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கணக்கீடு | (i) | இலங்கை கணக்கீட்டு நியமங்களைக் கடைப்பிடிக்காத சந்தர்ப்பங்கள் நிலவியமை. |
| | | (ii) | நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்களும் பொறுப்புகளும் சரிவர இனங்காணப்பட்டு கணக்கிலிடப்படாமையால் அவற்றின் பெறுமதி அதிகரித்தோ அல்லது குறைத்தோ கணிப்பிடப்பட்டிருந்தமை. |
| | | (iii) | நாட்குறிப்புகளில் உரிய துணை ஆவணங்கள் (Supporting Documents) சேர்த்துக் கொள்ளப்படாமை. |
| (ஊ) | சேவைப் பிரிவின் பாதுகாப்பு நடவடிக்கைகளது நிர்வாகம் | | பழுதுபார்க்கப்பட்ட வாகனங்களது உதிரிப் பாகங்கள் வளாகத்திற்கு அப்பால் எடுத்துச் செல்லப்படல் மற்றும் பின்னர் அவற்றைத் திரும்பவும் கொண்டு வருதல் என்பவற்றைப் பதிவு செய்வதற்கு பாதுகாப்புப் பிரிவில் பதிவேடு ஒன்று இருந்தபோதும், சேவைகளைப் பெறும் சில வாகனங்களது உதிரிப் பாகங்களைக் கொள்வனவு செய்வதற்கும் அவற்றைச் சேவைக்குட்படுத்தவும் பழைய பாகங்கள் சேவைப் பிரிவிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் திருப்பி ஒப்படைக்கப்படாத சந்தர்ப்பங்கள் நிலவியமை. |
| (எ) | சேவை நிலைய வேலைப் பத்திர முகாமைத்துவம் | (i) | கூட்டுத்தாபனத்தின் சேவை நிலையத்தில் பெறப்படும் வேலைகளில் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் வேலை முடிவுற்ற மற்றும் வேலை முடிவுறாத எண்ணிக்கையை இனங்காணக்கூடியவாறான விதி முறைகள் இல்லாதிருந்தமை. |
| | | (ii) | வாகனங்கள் சேவைக்குட்படுத்துவது ஆரம்பமாகும்போது இனங்கண்டு கொள்ளப்படும் உப வேலைகளுக்கு வேறாக வேலைப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டபோதும், அவை பிரதான வேலைப் பத்திரங்களுடன் நாளதுவரையாக்கப்படாமையால் வாகனங்களுக்கான மொத்தச் சேவை எவை என்பதை பிரதான வேலைப்பத்திரத்தினூடாக இனங்காண முடியாது போனமை. |